திருச்செந்தூர் தாலுகா
சுதந்திரப் போராட்ட வீரர்கள்
நினைவு மலர்





திருச்செந்தூர் தாலுகா
சுதந்திரப் போராட்ட வீரர்கள்
நினைவு ஸ்தூபி அமைப்பு கமிட்டி,
திருநெல்வேலி

சமர்ப்பணம்

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அந்நிய ஆட்சியில் அவதிப்பட்ட பாரதம் சுதந்திர போராட்டத்தில் எண்ணற்ற தியாகங்களுக்குப் பின் விடுதலை பெற்றது. விடுதலை பெற்றது என்றால், யாரால் விடுதலை பெற்றது? எப்படி விடுதலை பெற்றது? தடியடி பட்டு, துப்பாக்கிக் குண்டு துளைத்து, ரத்தம் சிந்தி, சிறை சென்று, தூக்குமேடை ஏறிய பின்னர்தான் சுதந்திரம் வந்தது. ஆனால் யாருக்குத் தெரியும் இந்த வரலாறு?கட்சியோ-அரசாங்கமோ சுதந்திரப் போராட்ட வீர வரலாற்றை வெளியிட்டிருக்கிறதா? பள்ளிப் பாடப் புத்தகங்களிலாவது இந்த வரலாறு பூரணமாக ஏறியிருக்கிறதா? இல்லையே! அப்படியானால் நாட்டுமக்களுக்கோ, எதிர்காலப் பரம்பரைக்கோ இந்த வரலாறு எப்படி தெரியும்?

துரோகத்தைக் கூட மறந்துவிடலாம். ஆனால் தியாகத்தை மறக்கலாமா?

சுதந்திரம் பெற்று, ஆண்டுகள் பல சென்ற பின்னர் தான், தியாகிகளைப் பற்றிய நினைவே வந்திருக்கிறது.

தியாகிகளை கௌரவிக்கும் எண்ணம் மத்திய அரசுக்கு ஏற்பட கால் நூற்றாண்டுக் காலமாகியிருக்கிறது.

சுதந்திரம் என்ற சொல்லுக்கு, விடுதலை என்ற வாசகத்துக்கு, எமது சர்க்கார் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படும் பூரிப்புக்கு,யார் காரணமானவர்களோ,எவர் உரிமை படைத்தவர்களோ, அப்படிப்பட்டவர்கள் சரியான முறையில் கௌரவிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, நாட்டுமக்கள் மத்தியில் அவர்கள் வரலாறு பரப்பப்படவில்லை என்பதும் ஏற்றுக்கொள்ளத் தக்க குறைபாடே! மேலைய நாடுகளில் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளை ஏற்றிப் போற்றுகிறார்கள். துரோகிகளை தூக்கு மேடைக்கு அனுப்புகிறார்கள். ஆனால் இங்கே,நம் நாட்டில் தியாகிகளைப் போற்றவேண்டிய அளவுக்குப் போற்றவும் இல்லை,துரோகிகளை ஒழிக்க வேண்டிய அளவுக்கு ஒழிக்கவுமில்லை.

சுதந்திரம் பெற்று கால் நூற்றாண்டுக்குப் பின், காற்று சற்று திசைமாறி அடிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்தியாவிலேயே — தமிழ்நாட்டில் — திருநெல்வேலி ஜில்லாவில்—அதுவும் திருச்செந்தூர் தாலூகாவில் சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவு கூறும் புனிதப் பணி தொடங்கியிருக்கிறது.

தாங்கள் பாராட்டப்பட வேண்டுமென்பதில் தியாகிகள் பரபரப்பு காட்டவில்லை. அல்லது தங்கள் தியாக வரலாறுகளை மக்கள் நினைவு கூற வேண்டுமென்பதிலும் அவர்கள் அக்கறை காட்டவில்லை. ஆனால் பிரதிபலன் கருதாமல் செய்த சேவைக்கும் புரிந்த தியாகத்துக்கும் கிடைக்கும் பாராட்டும் கௌரவமும் எதிர்கால இளம் தலைமுறையினருக்கு ஒரு பாடமாகவும் வழிகாட்டுதலாகவும் இருக்குமே என்பதால்தான் தேச பக்தர்கள் மத்தியில் ஒரு ஏக்கமும் தாபமும் இருந்து வந்தது.

அந்த ஏக்கத்தை நீக்கி, தாபத்தைப் போக்கும் புனிதப் பணியில் திருச்செந்தூர் தாலூகா தமிழ்நாட்டுக்கே ஒரு முன்னோடியாக தன்னைக் காட்டிக் கொண்டது.

கட்டபொம்மனும், வ. உ. சியும், பாரதியும் பிறந்ததினால் புகழ் சேர்த்துக்கொண்ட நெல்லை மாவட்டம், இந்தியாவிலேயே — தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக தியாகிகளுக்கு உரித்தான கௌரவத்தை வழங்குவதன் மூலம் மேலும் பெருமை சேர்த்துக் கொண்டது.

தியாகிகளின் நினைவாக திருச்செந்தூரில் ஒரு நினைவு ஸ்தூபி, அதில் சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களின் பெயர்கள்; ஸ்தூபியை திறந்து வைப்பது மத்திய பாதுகாப்பு அமைச்சர் கனம் பாபுஜி ஜகஜீவன்ராம்!

விழா வைத்து, கூடிக்கலைவது மட்டுமல்ல நோக்கம். யாருக்காக விழா எடுக்கிறோமோ, எவரின் பெயர்களைக் கல்லில் பொறிக்கிறோமோ, அத்தகைய போராட்ட வீரர்களின் — தியாகச் செம்மல்களின் — தேசபக்த கண்மணிகளின் வீரமிகு வரலாற்றை புத்தக வடிவில் உருவாக்கி—(கட்சி செய்யாததை அரசாங்கம் கவனியாததை) நாட்டு மக்களின் கைகளிலே தவழச்செய்ய வேண்டுமென்று விழாக் கமிட்டியினர் முடிவெடுத்தனர். அவர்களின் எண்ணங்களின் சிந்தனைகளின் பிரதிபலிப்புதான். எதிரொலிதான் இந்த திருச்செந்தூர் தாலூகா சுதந்திரப் போராட்ட வீரர்கள் நினைவு மலர்.

மலரில் பலரின் வாழ்க்கை வரலாறுகள் வந்திருக்கலாம். சிலரின் வரலாறு வராமலுமிருக்கலாம் அதனால் அவர்கள் தியாகம் மறைக்கப்பட்டதாகவோ வீண்போனதாகவோ யாரும் நினைக்கவேண்டியதில்லை.

திருச்செந்தூரில் உருவாகி, கம்பீரமாகக் காட்சிதரும் அந்த ஸ்தூபி, ஸ்தூபிக் கல்லிலோ, மலரிலோ இடம் பெற்றவர்கள் சார்பாக மட்டுமல்ல, எண்ணரும் தியாகம் புரிந்த இனம் தெரியாத — அடையாளம் தெரியாத — விடுபட்டுப் போனவர்களின் சார்பாகவும் நிமிர்ந்து நிற்கிறது.

குறித்த காலத்தில் மலரை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் சில குறிப்புகள் விடுபட்டிருக்கலாம். குற்றம் காணுமல் குணத்தைமட்டும் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தாய்நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட, இன்னும் பாடுபட்டுக் கொண்டிருக்கிற தியாகக் கண்மணிகளின் பாதக்கமலங்களில் இந்த நினைவு மலரைச் சமர்ப்பிக்கிறோம்.

பொக்கிஷம் போல் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய இந்த நினைவு மலரின் மணம் பரவட்டும். திக்கெட்டும் பரவட்டும். தமிழ்நாடும், பாரதமும், உலகமும் அந்த வீரத் தியாகசீலர்களின் புகழ் பாடட்டும். உலகெங்கும் ஒலிக்கின்ற அந்த இன்ப நாதத்திலே புது யுகம் பிறக்கட்டும். புது சகாப்தம் மலரட்டும்.

வாழ்க தியாகிகளின் நாமம் !

வளர்க அவர்தம் புகழ் !!

நெல்லை கணபதி
மலர் ஆசிரியர்.



M. Bhaktavatsalam

15, Warren Road,
Mylapore, MADRAS-4.

19—4—1973.

திருநெல்வேலி மாவட்டம் எப்பொழுதும் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரப்போக்கோ, பங்கோ கொண்டது. குறிப்பாக, திருச்செந்தூர் தாலுகா, நம் இறுதிப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டது. இந்த தாலுகாவைச் சார்ந்த சுதந்திர வீரர்களும், தியாகிகளும் என்றும் தங்கள் சாதனைகளைப்பற்றி பெருமை கொள்ளுகின்றார்கள். இந்த தாலுகாவில் வீரத் தியாகிகளின் நினைவு என்றென்றும் மக்களிடையே, பதியும் வகையில் இவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட ஒரு ஸ்தூபி திருச்செந்தூரில் அமைக்கப்படுகிறது. இந்த சீரிய முயற்சியில் முதன்மையாக நிற்கின்றவர் தலைவர் திரு. கே. டி. கோசல்ராம். அவருக்கு திருச்செந்தூர் தாலுகா பெரிதும் கடமைப்பட்டுள்ளது. அவர் அழைப்பை ஏற்றுக்கொண்டு நமது பாதுகாப்பு அமைச்சர் பாபுஜீ திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் மே 6-ம் தேதி திருச்செந்தூர் வந்து இந்த ஸ்தூபியைத் திறந்து வைக்கின்றார். அந்நிய ஆட்சியை அகற்றுவதற்கும், சுதந்திரம் பெறுவதற்கும் மக்கள் காட்டிய வீரத்தையும், உறுதியையும் அவர்கள் செய்த தியாகத்தையும் மக்கள் என்றென்றும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதுவே பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், அதன் பரிபூர்ணப் பலனை மக்கள் அனைவரும் அடையச் செய்வதற்கும் ஒரே வழி. இத்தகைய நினைவுச் சின்னங்களை அந்நிய நாடுகளிலும் காண்கின்றோம். திருச்செந்தூர் காட்டும் இந்த வழியை பாரதம் பூராவும் பின்பற்றும் என்று நம்புகின்றேன்.

திருச்செந்தூர் சுதந்திர வீரர்கள் மற்றொரு அற்புத சாதனையையும் சாதித்து, ஒரு, நல்ல வழிகாட்டி இருக்கின்றார்கள். இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு திருச்செந்தூர், தாலுகா கடற்கரையில் உள்ள உப்பளங்களை பெரிய முதலாளிகளே அரசாங்கத்திடம் குத்தகை எடுத்து உப்பு உற்பத்தி செய்து பெரும் லாபம் அடைந்து வந்தனர். 1949-ல் திரு. கே. டி. கோசல்ராம் அவர்களும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். எஸ். செல்வராஜ் அவர்களும் உப்பளங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களைக்கொண்டு ஒரு

கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்த தொழிலாளிகள், எஜமானர்கள் என்ற நிலையை அடைந்து கணிசமான வருவாய்பெற்று வருகின்றனர் இதோடு சங்கமும் (கூட்டுறவு) நல்ல லாபம் அடைந்து அதை மூலதனமாக சேர்த்து வருகின்றனர். இந்த உப்பளத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் தமிழ்நாட்டுக்கும் பாரதத்திற்கும் சீரிய கூட்டுறவு முயற்சியினல் எவ்வாறு பலன் ஏற்படக் கூடும் என்பதற்கு வழிகாட்டியாக நிற்கிறது. இந்த சங்கத்தின் விழாவிலும், பாபுஜி திரு. ஜகஜீவன்ராம் கலந்து கொள்கிருர்.

மேற்கண்டவாறு மே மாதம் 6-ம் தேதி திருவிழாக்களுக்கு பேர்போன திருச்செந்தூர் ஸ்தலத்தில் தலைசிறந்த ஒரு தேசீயவிழா நடைபெறுகின்றது. பூம்புகார் விழாவைவிட இந்த திருச்செந்தூர் விழாவே மக்களின் உண்மையான உணர்ச்சியையும், நம்பிக்கையையும் உருப்படியான வகையில் வெளிப்படுத்தும். இதைப்பற்றி எல்லாம் மக்களின் சிந்தனையை தூண்டும் வகையில் விழாவின் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படுகிறது. இது அளிக்கிற வசீகரத்தையும், அறிவையும் அனுபவத்தையும் திருச்செந்தூர் மக்கள் மேலும் பயன்படுத்திக் கொள்வதோடு பாரத மக்களும் ஒரு புதிய விழிப்பை பெறுவார்கள் என நம்புகிறேன். தியாகிகளுக்கு என் அஞ்சலியை தெரிவிப்பதோடு விழாவைக் கொண்டாட விமரிசையான ஏற்பாடுகள் செய்த நண்பர்களுக்கு என் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எம், பக்தவத்சலம்

Phone : 441843

With best compliments from :

Pandian Hardware Stores

General Hardwares Pipes & Paints Dealers,

47-J, North Usman Road, T Nagar, MADRAS-17.

நினைவில் நிற்கும் இரட்டையர்கள்



(ஆத்தூர் திரு. S. V. சுயம்புலிங்கம், ஆசிரியர், 'சமூக ஒற்றுமை' சென்னை.)

பாரத மக்கள் விடுதலை போரில் பெரும் பங்கு கொண்ட நாளில் திருச்செந்தூர் தாலூகா மக்கள் நடத்திய வீரமிக்க போராட்டங்களும் செய்த தியாகங்களும் குறிப்பிடத்தக்கதாகும். இந்திய மக்கள் கவனத்தை தாலூகா மீது திரும்பச் செய்தவர்கள் அன்றைய சுதந்திர போராட்ட வீரர்கள். திருச்செந்தூர் தாலூகாவில் பிறந்ததற்காக நான் மிகவும் பூரிப்படைகிறேன்.

சுமார் பத்து ஆண்டுகளாக இந்தியா முழுமையும் குடியேறியுள்ள திருச்செந்தூர் தாலூகா பூர்வீக குடிகள் பல ஆயிரம் பேரை நான் சந்தித்து பேசியிருக்கிறேன். தலைவர் திரு. K. T. கோசல்ராம், தலைவர் திரு. M. S. செல்வராஜன் இருவருடைய திருநாமத்தை தெரியாத திருச்செந்தூர் தாலூகா மக்கள் யாரும் இல்லை. கி. பி. 19–ம் நூற்றுண்டில் தோன்றிய அந்த இரு அவதார புருஷர்களும் சரித்திரத்தில் இடம் பெறத்தக்கவர்கள்.

ஆறுமுகநேரி உப்பு சத்தியாககிரக வழக்கு, குரும்பூர் ரயில் நிலைய வழக்கு, மெஞ்ஞானபுரம் தபால் நிலைய வழக்கு, குலசை கொலை வழக்கு - இப்படி பல வழக்குகள் திருச்செந்தூர் தாலூகா பெயரை வெளியில் தெரியச்செய்ததோடு சுதந்திர போராட்டத்தில் திருச்செந்தூர் தாலூகாவிற்கு ஒரு "விடுதலை போராட்ட வரலாறு"ம் அமைந்தது என கூறலாம்.

நாடு விடுதலை பெற்றபின், சுதந்திர போராட்டத்தில் பங்கு கொண்ட இத்தாலூகா தியாகிகள் பலர் வறுமையில் வாடியபோது, அவர்களுக்கு ஆங்காங்கே தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் வாழ வழிசெய்து உற்சாகப் படுத்தியவர்கள் தலைவர் திரு. K. T. கோசல்ராம் அவர்களும், தலைவர் திரு. M. S. செல்வராஜன் அவர்களும் என்பதை நம் தாலூகா மக்கள் என்றும் மறக்கமுடியாது.

சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட தியாகிகளுக்கு மாநில அரசும், மத்திய அரசும் உதவித்தொகை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கத்திடம் பல முறை வற்புறுத்திக் கூறி, வெற்றி கண்டவர்கள் அவர்கள். தியாகிகளுக்கு மான்யம் கொடுக்க அரசு முன் வந்தபோது, இத் தாலூகாவில் உள்ள தியாகிகளுக்கு மான்யம் கிடைக்க அயராதுழைத்த தீரர்கள் இந்த "இரட்டையர்கள்".

தேசவிடுதலைக்கு பின் 1946, 1952, 1962ம் வருஷங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வென்று, சட்ட மன்ற உறுப்பினராகவும் 1958ல் மேல் சபை உறுப்பினராகவும் சிறப்புடன் பணியாற்றிய தலைவர் திரு K. T. கோசல்ராம் அவர்கள், இத்தாலூகா மக்களுக்கு செய்த சேவைகளை நாடறியும்.

1954, 1957, 1962ம் வருஷங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வென்று சட்டமன்ற உறுப்பினராகவும், தான் பிறந்த ஊரான ஆறுமுகநேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும், நெல்லை ஜில்லா போர்டு உறுப்பினராக இருமுறையும் ஜில்லாபோர்டு உபதலைவராகவும், சிறப்புடன் பணியாற்றிய தலைவர் திரு M. ?. செல்வராஜன் இந்தத்தாலூகா, மக்களுக்கு செய்த சேவைகளை மக்கள் நன்கு அறிவார்கள்.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு தாலூகா தலைநகரில் நினைவு சின்னம் ஏற்படுத்தும் பணியை இந்தியாவிலேயே முதல் முதல் திருச்செந்தூர் தாலூகாவில் மேற்கொள்கிறோம். இந்த பெருமையை திருச்செந்தூர் தாலூகா மக்கள் பெற காரணமானவர்கள் புகழ்பெற்ற அந்த மறக்கமுடியாத இரட்டையர்கள்தான். தியாகிகள் நினைவு சின்னம் அமைக்க, வேலை திட்டங்கள் நடைபெற நிதிவசூல் பணியை அவர்கள் சென்னை நகரில் மேற்கொண்ட போது, அவர்களோடு இணைந்து சென்ற நான் தலைநகரில், திருச்செந்தூர் தாலூகா மக்கள் கொடுத்த மாபெரும் வரவேற்பையும் நல்லாதரவையும் நேரில் கண்டு மிகவும் பூரிப்படைந்தேன்.

திருச்செந்தூர் தாலூகாவில் தேச விடுதலைப் போரில் பங்குகொண்ட தியாகிகளுக்கு தாலூகா தலைநகரில் நினைவு சின்னம் ஏற்படுத்தும் நன்னாளில் திருச்செந்தூர் தாலூகாவிற்கு புகழ் தேடித்தந்த அந்த இரட்டையர்களை வாழ்த்துகிறோம்.

கி. பி. 19-ம் நூற்றாண்டில் தோன்றிய இந்த இரட்டையர்கள் தாலூகா மக்களின் நினைவில் என்றும் நிலைத்து நிற்பார்கள். அவர்கள் புரிந்த தியாகங்கள், ஆற்றிய சேவைகள் இந்திய சரித்திர வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படத் தக்கவை. வாழ்க அந்த "வரலாற்று நாயகர்கள்."!

வீர காவியம்

படைத்த

திருச்செந்தூர் தாலுகா

1931-32. வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க வெறி நாடெங்கும் தலைவிரித்து ஆடிய நேரம். ஏகாதிபத்தியத்தின் தொங்கு சதைகளான அதிகார வர்க்கத்தின் காட்டு தர்பார் சகிக்க முடியாத அளவுக்கு எல்லை மீறிய கால கட்டம்!

மக்களின் போர்க்கோலம்

கொடுமைக்கு ஆளான இந்திய மக்கள் குமுறும் உள்ளத்துடன் செய்வதறியாமல் திகைத்து நின்றனர். அந்த நேரத்தில் காந்திஜியின் தலைமையில் சுதந்திரச் சங்கநாதம் முழங்கிற்று. ஆமையாக அடங்கிக் கிடந்த மக்கள் அரிமாவாக மாறி புதிய தெம்புடன் விடுதலைக் களம் நோக்கி அணி வகுத்தனர். நாடெங்கும் பல்வேறு ரூபங்களில் போராட்டங்கள் வெடித்துச் சிதறின. அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து தமிழக மக்களும் போர்க்கோலம் பூண்டனர்.

தாலுகா மக்களின் விஸ்வரூபம்

வெள்ளையனை எதிர்த்து விண்ணை திரக் கிளம்பிய போர்க்குரல், பாரதத்தின் தென்கோடியிலிருக்கும் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள திருச்செந்தூர் தாலுகாவிலும் எதிரொலித்தது. விஸ்வரூபம் எடுத்துள்ள அந்த தாலுகா மக்கள் வெறி பிடித்த அதிகார வர்க்கத்தை சில நாட்கள் தங்கள் காலடியில் பணிய வைத்தனர்.

அக்கினிக்குண்டம்

அந்த தாலுகாவில், எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராமல் சுதந்திர அக்கினி குண்டத்தில் தாங்களாகவே வந்து குதித்து வீர மரணம் அடைந்த தியாகிகள் எத்தனை? போலீஸ் தடியடியால் கை, கால் ஊனமுற்று உருக்குலைந்து போனவர்கள் எத்தனை பேர்? மகனைப் பறிகொடுத்த தாய், தாயைப் பறிகொடுத்த மகன், கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன் எத்தனை? எத்தனை?

தடியடி, துப்பாக்கிச் சூடு, தூக்கு மேடை எதையும் துச்சமென மதித்துப் போராடிய அந்த வீர, வீராங்கனைகளின் விடுதலை போதத்தை வர்ணிக்க வார்த்தைகளில்லை.

விலையாக தலைகள்

திருச்செந்தூர் தாலுகா மக்களின் அந்த வீரம் செறிந்த போராட்டங்களையும், போராட்ட பலி பீடத்தில் தங்களின் தலைகளையும் விலையாகக் கொடுத்த வீர வரலாற்றையும் சற்று நினைவு படுத்தித் திரும்பிப் பார்ப்போம்,

1931-32 வருடத்தில் உப்புச் சத்தியாகிரகம், கள்ளுக்கடை மறியல், அந்நியத் துணி பகிஷ்காரம் ஆகியவற்றில் பலர் ஈடுபட்டனர். போலீஸ் அடக்குமுறை காரணமாக உயிரிழந்தவர்கள் ஏராளம். அந்த வரிசையில் தண்டுபத்து ஆறுமுகநயினார் போலீஸ் தடியடியால் காயம் பட்டு மரணம் அடைந்தார்.

காயல்பட்டிணம் கர்ணம் திரு. வெங்கிட்டராம முதலியார் வேலையை விட்டுவிட்டு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார்.

துண்டுப் பிரசுரம்

போராட்டத்துக்கு தூண்டுகோலாக இருந்த வீரவநல்லூர் திரு வி. வீரபாகு கொடுக்கும் போர் திட்டம் நிறைந்த துண்டு பிரசுரங்களை திரு வரதராஜுலு நாயுடு, திரு. கோசல்ராம், காயல்பட்டிணம் சம்சுதீன், வரிசை முகம்மது, P. M. K. செய்யது முகம்மது போன்ற இளைஞர்கள் ரயில்களிலும் மற்றும் எல்லா இடங்களிலும் ஒட்டி தாலுகா முழுவதும் தேசிய இயக்கத்தை பரவச் செய்தார்கள்.

தலைவர்கள் கைது

1942 ஆகஸ்டு 9ம்தேதி தலைவர்கள் கைது செய்யப்பட்டதால் பாரதமே வெகுண்டெழுந்தது. ஆகஸ்டு 11ந்தேதி ஆறுமுகநேரி இந்து உயர்நிலைப் பள்ளி முன் திரு. த. தங்கவேல் நாடார் தலைமையில் பிரம்மாண்டமான கூட்டம் கூடியது. திரு. எஸ். ஏ. ராமச்சந்திர டோக்கோ, திரு. பி. எஸ். ராஜகோபாலன், திரு எம். எஸ். செல்வராஜ் ஆகியோர் பம்பாய் தீர்மானம் பற்றி விளக்கினர்

திரு கோசல்ராம் அழைப்பு.

வெள்ளையனை எதிர்த்து நாம் நடத்தும் இந்த போராட்டம் இறுதி போராட்டமாகும் என்றும் திருச்செந்தூர் தாலுகாவை பொறுத்தமட்டில் இங்கு அந்நிய அரசாங்கம் எதுவுமில்லை என்பதை நாட்டிற்கு நிரூபித்துக் காட்ட வேண்டுமென்றும்போராட்டம் எத்தகையதாகஇருக்கவேண்டுமென்பதை ரகசியமாகக் கூடி முடிவெடுக்க 12ந் தேதிகாலை 8 மணிக்கு சந்தைக்கு முன்புள்ள அரசமரத்தடியில் கூட வேண்டுமென்றும் திரு. கோசல்ராம் அழைப்பு விடுத்தார்.

நிர்வாகம் ஸ்தம்பிப்பு

ஆகஸ்டு 12ந் தேதி மக்கள் சாரை சாரையாக வந்து கூடினர். சர்க்கார் அதிகாரிகளையும் ஊழியர்களையும் ராஜினாமா செய்யும்படி செய்யவேண்டும், சர்க்கார் நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்யவேண்டும் என்றும் திரு. கோசல்ராம் ஆவேசமாகப் பேசினர்.

ஆணையிடுங்கள், தயார்!

கூடியிருந்த மக்கள் கூட்டம் உணர்ச்சிவசப்பட்டு எத்தகைய தியாகமும் செய்யத்தயார் என்று கூறி, தலைவர்களின் ஆணையை எதிர்நோக்கிநின்றது. ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆறுமுக நேரி உப்பு பாக்டரி அதிகாரிகள்வீட்டை நோக்கி கூட்டம் ஆர்ப்பரித்து சென்றது

அரசாங்கமே இல்லை!

அதிகாரிகளை ஒவ்வொருவராகப் பார்த்து ராஜினாமாசெய் என்று கூட்டம் கோரியது. அதிகாரிகள் அதிர்ச்சிக்குள்ளானார்கள்; உப்பளத்தில் சத்தியாகிரகம் தொடங்கியது, (சர்வே நிர். 99ல்) உப்பு பாத்திகள் போடப்பட்டன சர்க்கார் அலுவலகங்கள் அனைத்தும் மூடும்படி செய்யப்பட்டன. தாலுகாவில் அரசாங்கமே இல்லையென்ற நிலை உருவானது.

அடக்குமுறை ஆரம்பம்

ஆகஸ்ட் 15. அதிகார வர்க்கம் தன் கைவரிசையைக் காட்டத்தொடங்கியது. ஆறுமுகநேரியில் மட்டும் சுமார் ஆயிரம் பேரை போலீஸ் கைது செய்து கடும் வெயிலில் (காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை) நிற்க வைத்தனர்.

கொடுமைக்குள்ளான செல்வராஜ்!

கைது செய்யப்பட்டவுடன் திரு. ஏம். எஸ். செல்வராஜ் "மகாத்மா காந்திக்கு ஜே! வந்தேமாதரம்" என்று கோஷமிட்டார். போலீஸார் அவரை கோஷம் போடாதே என்று சொல்லி, ஒருவர் அடித்து மற்றவரிடம் தள்ள, மற்றவர் அடித்து இன்னொருவரிடம் தள்ள, இப்படியாக அவர் மயங்கி விழும் வரைஅடித்துகொடுமைப்படுத்தினார்கள்.

நகக்கண்ணில் ஊசி

நடு இரவில் ஜெயிலில் அவரது விரல்களை மடக்கி கட்டி, நகக்கண்களில் ஊசி இறக்கி ரோமத்தைப் பிடுங்கி செங்கல் சிட்சை செய்து சித்திரவதை செய்தனர்.

நாட்டன் திரு. தங்கவேல் நாடார் என்பவரை மிருகத்தனமாக அடித்து சிறையிலடைத்தனர். அடி காரணமாக செத்துவிடுவாரோ என நினைத்து அவரை சில தினங்களில் வெளியே விட்டு விட்டனர். ஆனால் அவர் கடுமையான அடிபட்டதால் நெஞ்சில் ரத்தம் கட்டி மரணம் அடைந்தார். மேலும் எண்ணற்ற தொண்டர்களும் முதியவர்களும், கடும் சித்திரவதைக்குள்ளானார்கள்.

எங்கும் போராட்டம் - புறப்படுங்கள்

அடக்குமுறை அதிகமாக மக்களின் ஆவேச உணர்ச்சி கொந்தளித்து எழுந்தது. தாலுகா முழுவதும் ஏககாலத்தில் போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும் வெள்ளாளன்விளை கட்டிலுள்ள மணல்தேரியில் ஆகஸ்ட் 17உ இரவு 8 மணிக்குகூடவேண்டுமென்றும் துடியாக துடித்துத் கொண்டிருந்த தாலூகா மக்களுக்கு திரு. கோசல்ராம் அழைப்பு விடுத்தார்.

அழைப்பை ஏற்று ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கூடினார்கள். திரு. கோசல்ராம் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது.

ஓயமாட்டோம்

மருதூர்கரை திரு. காத்தக்குட்டித் தலைவர் குற்றப்பரம்பரை சட்டத்தின்

மூலம் நம்மை அடிமைகளாக நடத்தும் இந்த வெள்ளை அரசாங்கத்தை ஒழித்துக் கட்டுவதுவரை ஓயமாட்டோம். ஓயக் கூடாது என்று மறவர் குல மக்களுக்கு வீர கர்ஜனையோடு அழைப்பு விடுத்தார்.

கஜானாவை தகர்க்க பெஞ்சமின் தீர்மானம்

திருச்செந்தூரிலுள்ள தாலூகா ஆபீஸையும் கஜானாவையும் தகர்த்து எறிய வேண்டுமென திரு. ஏ. எஸ். பெஞ்சமின் தீர்மானம் கொண்டுவந்தார் தாலூகாவைச் சுற்றி மலபார் ஸ்பெஷல் போலீஸ் இருப்பதால் நமது திட்டம் தோல்வியுறலாம் என்றார் மங்களா பொன்னம்பலம்.

ஆயுதங்கள் வேண்டாமா?
கோசல்ராம் கேள்வி!

தேவையான ஆயுதங்களை சேகரித்து கொண்டு போராடலாம் என்றும் நமது கூட்டம் தாலூகா பூராவிலுமுள்ள தந்தி கம்பிகளை வெட்டுவதன் மூலம் தந்தி போக்குவரத்தை துண்டிக்க வேண்டும் என்றும் குலசேகரப்பட்டணத்தில்வேலை நடக்க விடாமல் செய்யவேண்டுமென் றும் ஒவ்வொரு கிராமத்திற்குள்ளும் நமது இயக்கம் ஊடுருவிச் செல்ல வேண்டும் என்றும் உருக்கமாகவும் வீராவேசமாகவும் கூட்டத் தலைவர் திரு. கோசல்ராம் பேசினார்:

திரு. ஜி. இ. முத்து சித்தன்விளை ஆறுமுகநயினார் போன்றவர்கள் திரு. கோசல்ராம் கூறிய கருத்தை நிறை வேற்ற வேண்டுமென கூறினார்கள்.

களத்தில் கிராமமுன்சீப்புகள்

அன்றுமுதல் தாலூகா முழுமையும் போராட்டம் பல்வேறு ரூபங்களில் தொடங்கியது. நாதன்கிணறு பூச்சிக் காட்டில் கிராம முன்சீப்புகளாக இருந்த திரு நாராயண நாடார் திரு சாமி நாடார் ஆகியோரின் தலைமையில் திரு. சுந்தர லிங்கம் திரு. ஆறுமுகவேல் நாடார் திரு. உ. கந்தசாமி நாடார் உள்பட நூற்றுக்கணக்கான பேர்கள் கள்ளுக் கடையை தீ வைத்துக் கொளுத்தினார்கள் கிராமத்தில் யாரும் கள், சாராயம் குடிக்கக் கூடாது என கட்டுப்பாடு செய்யப்பட் டது. மீறியவர்கள் தலைமொட்டையடிக் கப்பட்டு கழுதைமேல் ஏற்றி ஊர்வல மாகக் கொண்டுவரப்பட்டனர். கள்ளுக் குடித்தவர் என்பதற்கு அடையாளமாக 'க' என்று தலையில் மொட்டையடிப்பார் கள். அவ்விதம் மொட்டையடித்த நாவி தர் சிவலிங்கம் என்பவரையும் அடித்து கைது செய்தார்கள்.

குடும்பமே கைது

சர்க்கார் காடுகள் அழிக்கப்பட்டன. கிராமமுன்சீப் திரு. நாராயண நாடார் திரு. சுவாமி நாடார் குடும்பமே கைதா னது. நாராயண நாடார் புதல்வர்கள் ஆறுமுகப்பாண்டியன, சிதம்பரபாண்டி யன் இருவருக்கும் தலா 12 கசையடி தண்டனை கொடுக்கப்பட்டது. அந்தக் கிராமமே போலீஸின் அட்டூழியத்துக்கு ஆளாயிற்று. தாய்மார்கள் முதல் குழந் தைகள் வரை தப்பவில்லை.

கோசல்ராம் தலைமையில் முகமூடி வீரர்கள்

ஆகஸ்டு 18. திரு. கோசல்ராம் தலைமையில் முகமூடி அணிந்த நூற்றுக் கணக்கானவர்கள் குரும்பூர் ரயில் நிலை யம் நோக்கிச் சென்றனர். இரண்டு போலீசார் துப்பாக்கி ஏந்தி நின்றனர். 'ஆயுதம் தேவை' என்று வெள்ளாளன்

விளை தேரியில் திரு. கோசல்ராம் கூறியதை நிறைவேற்றும் முறையில் போலீசாரிடமிருந்து இரண்டு துப்பாக்கிகளையும் முகமூடி வீரர்கள் பிடுங்கினர்கள். ஸ்டேஷன் தீக்கிரையாக்கப்பட்டது ஸ்டேஷனிலிருந்த கதர் பண்டல் தனியாக எடுத்துப்போடப்பட்டிருந்தது.

போராட்ட வீரர்களுக்கு தோட்டாவுடன் இரண்டு துப்பாக்கிகள் கிடைத்தன.

தந்திக் கம்பிகளே இல்லாத காட்சி

இம்மாதிரி இயக்கம் எங்கும் நடக்க ஆரம்பித்தது. குரங்கணி, திரு. பி. துரைசுவாமி தலைமையில் நூற்றுக் கணக்கானவர்கள் தந்திக் கம்பிகளை வெட்டியும் காடுகளை அழித்தும் போராடினார்கள்.

தென் திருப்பேரை, கடையனோடை, [illegible] வட்டாரங்களில் தந்திக்கம்பிகளே காணப்படவில்லை.

மனித வேட்டையாடிய மனித மிருகங்கள்

இதன் மத்தியில் அப்பாதுரை என்ற அடிபுடி சுப்ரமணியும், சிவானந்தம் என்ற இன்ஸ்பெக்டரும் கிராமம் கிராமமாகச் சென்று மிருகங்களை வேட்டையாடுவதுபோல் மனிதர்களை வேட்டையாடினர்கள். போலீஸ் குண்டாந்தடிக்குத் தப்பியவர்கள் தாலுகாவில் யாரும் இல்லை என்று கூட சொல்லலாம். வீடுகளை இடித்தும், நெல், அரிசி கருப்புக் கட்டியை மணலில் போட்டு மிதித்தும் நாசப்படுத்தினர்கள்.

புதுக்குடி சுனையில் இரவு 10 மணிக்கு!

இந்த அக்கிரமத்தை அடக்க வழி முறைகள் கண்டுபிடிக்க செப்டம்பர் 9ம் தேதி மேலப்புதுக்குடி சுனையில் இரவு 10 மணிக்கு போராட்ட வீரர்கள் கூடினர்கள். போராட்ட வீரர்களுக்கு, புதுக்குடி கிராம மக்கள் பழமும் பச்சரிசிக் கஞ்சியும், துகையலும் பனை ஓலைப் பட்டையில் கொடுத்தார்கள். கூட்டம் துவங்கியது.

தற்கொலைக்கு தயாரா?
கோசல்ராம் கேள்வி!

"வெள்ளை ஆட்சியில் போலீஸ் கொடுமையை தவிர்க்க வேண்டுமானல் நம்மில் பலர் நாம் கூறும் கடமையை முடித்துவிட்டு தற்கொலைக்கும் தயாராக இருக்க வேண்டும். உங்களில் இதற்கு எத்தனைபேர் தயார்" என்று கோசல்ராம் கூட்டத்தைப் பார்த்து கேட்டார்.

சுட்டு வீழ்த்துங்கள்

கொடிய ஆட்சி முறையிலிருந்து மக்களைப் பாதுகாக்க இந்த அக்கிரமக்காரர்களைச் சுட்டு வீழ்த்தவும் நாம் தயாராக வேண்டும். புனிதமான அந்தக் கடமையை நிறைவேற்றிவிட்டு வாஞ்சிநாதனைப்போல் நாமும் தற்கொலை செய்துகொள்ள வேண்டும். அதற்கு எத்தனை பேர் தயார்? தயார் என்ருல் ரத்தக் கையெழுத்திட்டு தர வேண்டும் என்றும் திரு. கோசல்ராம் கேட்டார்.

ரத்தக் கையெழுத்து

கடையனோடை மகாராஜன், ஆலந்தலைபெஞ்சமின், ஏரல் நடராஜன் செட்டியார், கொட்டங்காடு A. T. காசி, மெய்

யன் பரப்பு த சிவந்திக்கனி, பரமன் குரிச்சி நாகமணிவாதிரி, செட்டியாபத்து M. அருணசலம், வாழவல்லான் ரா. பச்சைப்பெருமாள், ஆகிய எட்டு பேர் எதற்கும் தயார் என்று ரத்தக் கையெழுத்திட்டுக்கொடுத்தனர். தீவிரப் பணிகளை நிறைவேற்றும் முயற்சிக்கு உதவ முன்வந்தவர்களில் கர்ணம் திரு வெள்ளக்கண் நாடார், வள்ளிவிளை வடிவேல் துரைராஜ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அந்நியனுக்கு ஆதரவாக சாட்சி சொல்வதா?

கூட்டம் நேராக பூச்சிக்காடு நோக்கிச் சென்றது. கி. மு. ~~சாமி~~ நாடாருக்கு எதிராக சாட்சி சொல்ல நினைத்தவரின் வீட்டை கூட்டம் சூழ்ந்து கொண்டது. 'சாட்சி சொல்லமாட்டேன்' என்ற உறுதி மொழியைப் பெற்ற பின் கூட்டம் திரும்பியது.

தபாலாபீஸ் தாக்குதல்
த. தங்கவேல் நாடார் மீது வழக்கு

சாத்தான்குளம் நோக்கி ஒரு படையும், மெஞ்ஞானபுரம் நோக்கி மற்றொரு படையும் சென்றது. மெஞ்ஞானபுரம் போஸ்ட் ஆபீசைத் தாக்கியதாக திரு. த. தங்கவேல்நாடாரை 1வது எதிரியாகவும் மற்றும் 8 பேர்கள் மீது வழக்கு போடப்பட்டது. வழக்கு முடிவடையும் 20 மாதம் வரையிலும் திரு. தங்கவேல் நாடாரும் மற்றவர்களும் சப்ஜெயில்களில் இருந்தனர். 20 மாதம் கழித்து பின்னர் வழக்கு வாபஸ் பெறப்பட்டது. வழக்கு வாபசானவுடன் ஜெயிலில் இருந்து வெளிவந்த திரு. தங்கவேல் நாடாரை மீண்டும் கைது செய்து பாதுகாப்புக் கைதியாக தஞ்சாவூருக்கு கொண்டுபோய் விட்டனர்.

வெள்ளை சப் கலெக்டரை மடக்கித் தாக்க முயற்சி

செப்டம்பர் 14 இந்த வீரர்கள் பரமன்குரிச்சி பக்கம் போகும்பொழுது, வெள்ளை சப்கலெக்டர் ஒருவர் கார் பஞ்சராகி ரோட்டில் நின்றுகொண்டிருக்கிறார் என்று தகவல் வந்தது. போலீஸ் அடக்குமுறைக்கும் அட்டூழியத்துக்கும் உத்திரவு போட்டவனே இந்த கலெக்டர் தான் என்று தெரிந்ததும் எப்படியும் அவனை மடக்கிப் பிடிக்க வேண்டும் என்று வீரர்கள் அந்த சப்கலெக்டர் நிற்குமிடம் தேடி ஓடினார்கள். துரதிர்ஷ்டவசமாக அடுத்து வந்த காரில் அந்த வெள்ளையன் ஏறித் தப்பி பிழைத்துவிட்டான்.

வீரர்களுக்கு அன்று உணவளித்த பெருமை சித்தன்விளை திரு பெரிய நாடாரைச் சாரும்.

காரணம் கோசல்ராம்தான்!

தாலுகாவில் நடந்துவரும் போராட்டங்களுக்கு எல்லாம் ஆதர்சமாக விளங்குபவர் திரு. கோசல்ராம் என்பதை அதிகார வர்க்கம் கண்டு கொண்டது. செய்திகள் பறந்தன. போலீஸ் அதிகாரிகள் சுறுசுறுப்பானார்கள்.

திரு. கோசல்ராம் கலெக்டர் ஹெச்மாடியால் கைது செய்யப்பட்டார்.

ராஜகோபாலன் தலைமை

என்றாலும் போராட்டம் நின்றுவிடவில்லை தொடர்ந்து நடந்தது திரு. பி எஸ். ராஜகோபாலன் தலைமை தாங்கினார். உடன்குடி வட்டாரம் திரு A T காசி, தேவ இரக்கம், பூவலிங்கம், மந்திரம்

போன்ற இளைஞர்கள் போராட்டத்தில் மிகுந்த ஆவேசத்துடன் ஈடுபட்டார்கள் மிகக் குறைந்த 16 வயதுள்ள நாராயணனும் பங்கு கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரவு 3 மணிக்கு உப்பளம் தாக்குதல்:

செப்டம்பர் 19 சிறு நாடார் குடியிருப்பை அடுத்த பைப்லேன் பக்கம் இரவு திரு பி. எஸ். ராஜகோபால் தலைமையில் வீரர்கள் கூடினார்கள்.

குலசேகரப்பட்டிணம் உப்பளத்தை தாக்க வேண்டும் அங்குள்ள வெள்ளை அதிகாரியிடமிருக்கும் துப்பாக்கியை கைப்பற்ற வேண்டும் என்று முடிவு செய்து இரவு 3 மணிக்கு கிளம்பிச் சென்றார்கள் வெள்ளை அதிகாரி லோன் கூட்டத்தை நோக்கி சுட்டான்

வெள்ளை அதிகாரி லோன் மரணம்

வீரர்கள் தரப்பிலிருந்த துப்பாக்கியிலிருந்து குண்டுகள் வெடித்தன. ஆனால் இருதரப்பிலும் குண்டுகள் குறி தவறிவிட்டன. பைனட்டால் லோன் குத்த முயற்சித்த போது அவன் மீது 14 வெட்டுகள் விழுந்தன. விளைவு வெள்ளையன் மடிந்தான். துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

இந்தப் போராட்டத்தைநடத்தியது யார் என்பதைக்கண்டு பிடிக்க இயலாத அதிகாரிகள் கிராம மக்களை துன்புறுத்தினார்கள். மாணவர்கள்தான், முகமூடி அணிந்து இத்தனை போராட்டங்களை நடத்தியதாக எண்ணினார்கள். தாலுகா முழுவதும் அதிகாரவர்க்கஅரக்கர்களால் சூறையாடப்பட்டது.

கூட்டு அபராதம்

போலீசாருக்கு வேண்டாதவர்கள் எல்லாம் வழக்குகளில் சேர்க்கப்பட்டனர். எரியும் வீட்டில் பிடுங்கியது லாபம் என்ற முறையில் வீடுகளிலுள்ள பணத்தை எல்லாம் கொள்ளையடித்தனர். அத்தோடு நிற்காமல் பல கிராமங்களில் கூட்டுஅபராதம் விதிக்கப்பட்டது.

ஜெயில் கொடுமை

சுமார் 500 பேர்கள் கைது செய்யப்பட்டு திருச்செந்தூர் சப் ஜெயிலில் அடைக்கப்பட்டனர் கைது செய்யப்படும்போதும் ஜெயிலிலும் மிருகத்தை விட அவர்கள் கேவலமாக நடத்தப்பட்டனர் சகிக்க முடியாத அவலக் கொடுமைகள் செய்தார்கள்

அக்கிரமத்தை ஒழிக்க கோசல்ராம் உண்ணாவிரதம்

இந்தியாவில் பாதுகாப்புக் கைதியாக கைது செய்யப்பட்ட திரு கோசல்ராம் திருச்செந்தூருக்கு கொண்டுவரப் பட்டார். அநீதிகளையும், அக்கிரமங்களையும் நேரில் கண்டு விட்டால் உணர்ச்சிவசப்படும் சுபாவமுள்ள கோசல்ராம் ஜெயிலில் நடக்கும் கெடுபிடிகளைக்கண்டு வெகுண்டார். உண்ணாவிரதம் ஆரம்பித்தார். அதிகாரிகளிடம் கோபாவேசமாக நிலைமைகளை எடுத்துரைத்தார். பலன்! மாஜிஸ்திரேட் விசாரணை நடத்தினர் கொடுமைகள், இம்சைகள் ஓரளவு குறைந்தன.

தூக்கு தண்டனை

பல்வேறு சதிவழக்குகள் ஜோடனை செய்யப்பட்டன. விசேஷ நீதிபதிகள்

நியமிக்கப்பட்டனர். குலசை வழக்கில் திரு. ராஜகோபாலன், திரு. காசிராஜ னுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட் டது.எல்லா வழக்கிலும் அவர்கள் எதிரி களாகச் சேர்க்கப்பட்டனர். இதனால் மற்றவர்களும் 21 மாதங்கள் வரை கொக்கிரகுளம் சப்ஜெயிலில் வைக்கப் பட்டனர்.

விநோதமான, ஆனால் வேதனையான தண்டனை.

ஜெயில் வார்டர்கள், அரிசி, காய் கறிகளைத் திருடினார்கள். கைதிகளுக்குப் போதுமான அளவு கிடைக்கவில்லை. உடனே திரு. கோசல்ராம், திரு. ராஜ கோபாலன், திரு. காசிராஜன் ஆகிய மூவரும் ஜெயில் சூப்பிரண்டிடம் புகார் செய்தனர். புகாரைக் கேட்டுக் கொண்டு போனவர் உடனே உத்திரவு போட்டார். என்ன உத்திரவு?

மொட்டையடி

புகார்செய்த மூவரின் தலையை யும் மொட்டை அடித்து சாக்கினால் செய்த சட்டையை அணியும்படி செய்து கைகளில் விலங்கு மாட்டி, தனி அறை களில் அடைக்கும்படியும், உப்பில்லாத கேப்பைக் கூழ் கொடுக்கவேண்டு மென்றும் உத்திரவு வந்தது.

ஜெயிலில் இருக்கும் வீரர்களை உற்சாகப் படுத்தும் முறையில் திரு. N. A. நயினார் ஆச்சாரியும் திரு எ.எஸ். பெஞ்சமினும் தேசிய கீதங்களைப் பாடு வார்கள். கைதிகளின் உணர்ச்சிக் கொந்தளிப்புகளைக் கண்டு அதிகாரிகள் அதிர்ச்சிக்குள்ளாவார்கள்.

மலமும், தண்ணீரும் ஓடும் ஜெயில் அறை

இருவர் மட்டுமே இருக்கக்கூடிய அறையில் 12 பேர் வரை அடைக்கப் படுவார்கள். மலஜலம் கழிக்க ஜெயி லுக்குள் ஒரு டின் பீப்பாய் இருக்கும். அதில் ஏறி உட்கார்ந்து மலம் கழிக்க வேண்டும். அந்த நேரத்தில் சிலர் அதற்குள் விழுந்து விடுவார்கள். உடம் பெல்லாம் மலம் மயமாகிவிடும். அறை யிலும் மலமும் தண்ணீரும் ஓடும்.

மல நாற்றத்துடன் மங்களா

ஒரு முறை திரு. மங்களா பொன்னம்பலம் பீப்பாய்க்குள் விழுந்து உடம்பெல்லாம் மலத்துடன் ஒரு இரவு பூராவும் நாற்றத்துடன் கழித்தார். எவ்வளவு கேட்டும் கழுவிக்கொள்ள தண்ணீர் தர மறுத்து விட்டார்கள்.

நாங்குநேரி தாலுகா குட்டத்தை சேர்ந்த திரு. மகராஜ மார்த்தாண்டம் குலசை குரும்பூர் சதி வழக்குகளில் சேர்க்கப்பட்டு ஜெயிலில் கடுமையான சித்திரவதைக்கு ஆளானார். 21 மாதம் சப் ஜெயில்களில் இருந்தார்.

வாழவல்லான் திரு. பச்சைப் பெருமாள் குரும்பூர் சதி வழக்கில் சேர்க்கப்பட்டு 21 மாதம் சப் ஜெயில் களில் இருந்தார்.

போராட்டத்தில் மக்களை சேரவிடா மல் தடுக்க அதிகாரிகள் பலயுக்திகளையும் பய முறுத்தலையும் கையாண்டனர்.

கழுத்தளவு மண்ணில் கடையனோடை மகாராஜன்.

ஒருவரைப் பிடித்து வந்தார்கள். ஆழமான குழி தோண்டப்பட்டது.

அந்த நபரை குழிக்குள் இறக்கினார்கள். தலைமட்டும் வெளியேதெரியும் அளவுக்கு வைத்துவிட்டு கழுத்தளவு மண்ணைப் போட்டு மூடினார்கள். போராட்டத்தில் சேராதே என்று பயமுறுத்தினார்கள். குழியில் இறக்கி மண்மூடப்பட்ட நபர் கடையனோடை திரு. மகாராஜன் ஆவார்.

இப்படி நூற்றுக்கணக்கானவர்கள் அடக்குமுறைக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளானார்கள்.

விடுதலை

குலசை வழக்கில் திரு. ராஜகோபாலன், திரு. காசிராஜன் ஆகியோருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அதை ஜென்ம தண்டனையாக மாற்றுமாறு காந்திஜியும் ராஜாஜியும் முயற்சித்து வெற்றியும் கண்டார்கள்.

கொலையுண்ட லோன் துரையின் சகோதரிகளும் ராஜகோபாலன், காசி ராஜனுக்கு கருணை காட்டுமாறு விண்ணப்பம் செய்தார்கள்.

சுதந்திரத்திற்குப்பின் இருவரும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

விடுதலைப்போராட்ட வரலாற்றில் திருச்செந்தூர் தாலூகாவில் நடந்த சம்பவங்களையும், கலந்துகொண்ட சிலர் செய்த தியாகங்களையும் கிடைத்த தகவலை வைத்துக்கொண்டு ஓரளவுக்கு தந்திருக்கிறோம்.

அஞ்சலியும் வாழ்த்தும்

எது கிடைக்கும் என்று எண்ணாமல், என்னால் நாட்டுக்கு என்ன செய்ய முடியும் என்று எண்ணி சர்வபரித் தியாகம் செய்த அந்த ஆயிரமாயிரம் தியாகிகளுக்கு நமது உளமார்ந்த அஞ்சலியும், வாழ்த்துக்களும் உரித்தாகுக!

> ''கலெக்டரும் கடவுளல்ல
> அடிமை போலீஸ் கான்ஸ்டேபிளும்
> எமனுமல்ல
> வீரர்கள் நம்மையே வெல்ல''
>
> — அ. நயினார் ஆச்சாரி

குலசேகரப்பட்டிணம் கொலைவழக்கு.

எஸ். ஏ. ராமச்சந்திர டோகா

"இந்தியாவின் சுதந்திர வீரன் என்று ஒருவன் இருந்தால், அது, எங்கள் அண்ணன் காசிராஜனைத் தவிர வேறு ஒருவரும் இல்லை —என்று காசி ராஜனைக் கட்டித் தழுவிக் கொண்டு ராஜகோபாலன் கூறினர்" இவ்வாறு குலசேகரபட்டிணம் கொலை வழக்கில், சர்க்கார் தரப்பில் சாட்சிகூறிய, குலசேகர பட்டிணம், உப்பளம் போலீஸ் காவலாளி நெல்லை செஷன்ஸ் கோர்ட் விசாரணையில் தமது சாட்சியத்தை துவங்கினர்.

19-10-1942ல் குலசேகரபட்டிணம் உப்பளத்தில் நடந்த விடுதலை போராட்டத்தில், எதிர்பாராத விதமாக வடக்கு ஸ்காட்லாண்டைச் சேர்ந்த வெள்ளையரான லோன் என்னும் பேக்டரி ஆபீஸர் கொலையுண்டார்.

இக் கொலை வழக்கானது அவசரக் கால விசேஷ அதிகாரிகளின் கீழ் நெல்லை செஷன்ஸ் நீதிபதியாக இருந்த ஸ்ரீ பாலகிருஷ்ண அய்யரால், பலத்த போலீஸ் காவலுக்கு மத்தியில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. அந்த விசாரணையில் சாட்சியம் கூறிய உப்பு இலாகா போலீஸ் காவலர் மேற்கண்டவாறு தமது சாட்சியத்தை ஆரம்பித்து தீப்பற்றி எரிந்த உப்பு இலாகா கட்டிடத்தின் வெளிச்சத்தில் காசிராஜனையும், ராஜகோபாலனையும், மற்றும் குற்றவாளிகளையும் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது என்று வாக்குமூலம் கூறினர். இருபத்தைந்து எதிரிகள் சார்பில் வாதாட வக்கீல்கள் எவரும் முன்வரவில்லை. இதனைக் கண்ணுற்ற பிரபல காங்கிரஸ் வக்கீல் ஸ்ரீ எஸ். பி. சிவசுப்பிரமணிய நாடாரும், ஸ்ரீ. வி. எஸ், சங்கரசுப்பிர மணிய முதலியாரும் ஒன்றுகூடி வீர தியாகிகளின் விடுதலை போராட்ட வழக்குகளில் ஊதியம் எதுவும் பெருமல் தம்மைப்போல் இலவசமாக வாதாடு வதற்கான காங்கிரஸ் அபிமானிகளாய் உள்ள வக்கீல்கள் கே. எஸ். பாலாஜி டி. வி. ராமசேஷய்யர். டி. எம். சுப்பிர மணியம் அய்யர் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை தமக்குள் ஏற்படுத்தினர்கள்.

மதுரை பிரபல குற்ற வழக்கறிஞர் பாரிஸ்டர் ராமானுஜத்தை, பொது மக்கள் கொடுத்த நிதியிலிருந்து பீஸ் கொடுத்து, வழக்கை நடத்திவந்தார்கள் ஆயினும் என்ன! நெல்லை செஷன்ஸ் கோர்ட் தீர்ப்பில் தூக்குத்தண்டனையும் ஜென்ம தண்டனையும் 10 வருடம் சிறைத் தண்டனையும் பலருக்கு விதிக்கப் பட்டது.

தகுந்த வழக்கறிஞர் மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டது. அப்பீலும் பயனளிக்க

வில்லை. பின்னர் டில்லியிலுள்ள சமஷ்டி நீதி மன்றத்தில் அப்பீல் செய்யப் பட்டது. அதுவும் பலனளிக்காமல் போயிற்று.

இந்த வழக்கின் விபரம் மகாத்மா காந்திக்கும் எட்டியது. காந்திஜியின் ஆலோசனைப்படி, ராஜாஜி இவ் வழக்கின் அப்பீலை லண்டனிலுள்ள பிரிவு கவுன்சிலில் தாக்கல் செய்வதற் காக லண்டனுக்குப்புறப்பட தயாரானார். ஆனால், இச்சந்தர்ப்பத்தில் 2வது உலக யுத்தம் ஐரோப்பிய நாடுகளை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது. ராஜாஜி அவர்கள் லண்டனுக்கு வந்தால், அங்கு என்ன அரசியல் குழப்பங்கள் ஏற்படுமோ என்று பயந்த பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் அப்பீலை இந்தியாவிலேயே விசாரித்து முடிவு செய்வதற்கான ஒரு தனி உத்தரவை பிறப்பித்தார். அப்பீலும் நடைபெற்றது.

என்றாலும் பயனில்லை. ராஜாஜி இந்தியாவின் வைசிராய் வேவல் பிரபுவுக்கு, காசிராஜன் ராஜகோபால் மீதுள்ள மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டி வேண்டுகோள் விடுத்தார். மக்கள் கிளர்ச்சியும் வலுத்தது. வைசிராய், இவ்விரு வீரர்களின் மரண தண்டனை யை ஆயுள்கால தண்டனையாகக் குறைத்தார்.

முடிவாக, நாடு சுதந்திரமடைந்து, சென்னை மாநிலத்தில் சுதந்திர சட்ட சபை ஏற்பட்டு திகழும்போது, 1-4—'46ல், சிறையிலிருந்த தியாகிகள் அனைவருடன் வி. காசிராஜனும், பி. எஸ். ராஜகோபாலனும் விடுதலையாயினர்.

வாழ்க விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகமும், சேவையும்!



தேச விடுதலைக்காக உயிரையும் பணயமாக வைத்துப் போராடிய தேச பக்த வீரச்செம்மல்களைத்தும், இந்தியாவிலேயே முதன் முதலாக அந்த வீரர்களை நாட்டுமக்களுக்கு அறிமுகப் படுத்தும் புனிதப் பணியை மேற்கொண்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் நினைவு ஸ்தாபி அமைப்புக் கமிட்டிக்கும், குறிப்பாக போராட்டத் தளபதியும், தலைவருமான திரு K. T. கோசல்ராம் அவர்களுக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்தையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நெல்லை கணபதி

ஆசிரியர் : 'புதுசகாப்தம்'
செயலாளர்,
நெல்லை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி
ஆசிரியர் :
தியாகிகள் நினைவு சிறப்பு மலர்

கப்பல் ஏறுகின்றார்!

போகாதே போகாதே யுத்தத்திற்கே
போனாலும் லாபமில்லை நமக்கே — தோழா
போனாலும் லாபமில்லை நமக்கே
ஏகாதி பத்திய யுத்தமடா — யுத்தமடா
இந்தியர்க் கங்கென்ன சித்தமடா — தோழா
இந்தியர்க் கங்கென்ன சித்தமடா
அண்டம் புகழ் நகர் லண்டனிலே லண்டனிலே
ஆகாயம் தாவும் தீக் குண்டினிலே — தோழா
ஆகாயம் தாவும் தீக் குண்டினிலே
உண்டி உடையின்றி ஓடுகின்றார்
ஊரைவிட்டே கப்பல் ஏறுகின்றார்
ஏழை இந்தியரின் ஏக்கமடா — ஏக்கமடா
ஹிட்லர் உருவாய்த் தாக்குதடா — தோழா
ஹிட்லர் உருவாய்த் தாக்குதடா
பெஞ்சமின் சொல்லும் சேதியடா — சேதியடா
பேருலகில் நமக்கோர் நீதியடா — தோழா
பேருலகில் நமக்கோர் நீதியடா. (போகாதே)



A. S. பெஞ்சமின்

பிரம்ம தேவன் செய்த குற்றம்

தியாகிகள் நினைவுச் சின்னம் அமைப்பு வேலை நடந்து கொண்டிருக்கிறது. திரு K. T. கோசல்ராம், திரு. M. S. செல்வ ராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் திரு. K. சுப்பையா, ஆணையாளர் திரு. மந்திரம் ஆகியோருடன் கமிட்டி காரியதரிசியாகிய நானும் அதை பார்த்து விபரம் சொல்லிக்கொண்டிருந்தோம். 'போவோர், வருவோர் அதனைப்பார்த்துச் செல்கின்றனர். கல்லூரி மாணவர்கள் கூட்டமாக வந்து அதைப் பார்த்துவிட்டு தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டு, என்னை அழைத்து அதன் விபரம் கேட்கின்றனர்: விபரம் தெரிந்ததும் பெருமூச்சு விடுகின்றனர். அருகில் இருந்த மாணவர் சொல்கிறார், "நல்ல திட்டம்தான். எங்கள் உறவினர் இருவர் அதில் இடம் பெறுகின்றார். அது எங்கள் குடும்பத்துக்கு பெருமை" என்றார். அடுத்தவர் "நாம் இந்த போராட்டத்தைக் காணவும், அதில் பங்கு பெறும் பேறுபெறவும் முன்பே பிறக்காமல் போய்விட்டோமே", என்றார். உடன் அடுத்த மாணவர் "இது உன் குற்றம், என் குற்றம் அல்ல, பிரம்மதேவன் செய்த குற்றம்" என்றார்.

கே. கேசவன்,

செயலாளர், ஜில்லா காங்கிரஸ் கமிட்டி

செயலாளர். நினைவுச் சின்ன அமைப்பு கமிட்டி



திரு. K. I. கோசல்ராம்

S/o. K. I. நாடார் நடுத்தெரு ஆறுமுகனேரி. 101, புரசைவாக்கம் ஹைரோடு சென்னை-10.

1915ம் ஆண்டு டிசம்பர் மீ 12ம் தேதி ஆறுமுகனேரியில் திரு. K. I. நாடார், திருமதி பூவம்மாள் மகனாக சாதாரண குடும்பத்தில் பிறந்தார். ஆறுமுகனேரி, ஹிந்து உயர்நிலைப்பள்ளியில் 8வது வரையும் சென்னை செயின்ட் பால்ஸ் உயர்நிலைப்பள்ளியில் 10வது வரையும் படித்தார்.

1930 முதலே முழுநேர அரசியலில் ஈடுபட்டார். சிறு வயதிலேயே தேசியப் பற்று ஏற்பட்டு வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு விரோதமான துண்டு பிரசுரங்களை வினியோகித்தார்,. பலமுறை கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு. இளம்வயது காரணமாக ஒவ்வொரு முறையும் ஒரு வாரம் வரை சப்ஜெயிலில் வைத்து, அடித்து விட்டுவிடுவார்கள். உப்பு தொழிலாளர் சங்கத் தலைவரானார்.

1942 போராட்டத்தின்போது கலெக்டர் ஹெஜ்மாடியால் இந்திய பாதுகாப்புச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டார். உப்பு சத்தியாகிரக வழக்கில் $1\frac{1}{2}$ ஆண்டு தண்டிக்கப்பட்டார். பின் குரும்பூர் சதி வழக்கில் 1வது எதிரியாகவும், போலீஸ் அதிகாரிகளிடம் துப்பாக்கிகளைப் பிடுங்கியதாகவும், தூண்டியதாகவும் ஸ்பெஷல் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. 21 மாதங்கள் சப்ஜெயிலில் கொடுமைப்படுத்தப்பட்டார். சாக்கு சட்டையை அணியச் செய்தும், இரவும் பகலும் கைவிலங்கு போட்டும், தனி அறையில் அடைத்தும் துன்புறுத்தினர்கள்.

திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், தென்காசி, கொக்கிரகுளம் சப்ஜெயில்களில் இருந்தார். சரியான சாட்சியமில்லை என்று 21 மாதங்களுக்குப் பிறகு குரும்பூர் வழக்கை வாபஸ் பெற்றர்கள். பின் பாதுகாப்புக் கைதியாக தஞ்சை, வேலூர் சிறைகளில் இருந்தார் 1945 டிசம்பரில் விடுதலை செய்யப்பட்டார்.

ஆலயப் பிரவேச சட்டம் வருமுன்னமே திரு. A. கனகசபாபதி பிள்ளையுடன் தலைமை தாங்கி. திருச்செந்தூர் கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துச்சென்றர் ஒரு சில முதலாளிகளிடம் இருந்த உப்பு தொழிற்சாலையை 1949ம் வருடம் தான தலைவராக இருந்த உப்பு தொழிலாளர் சங்கத்திற்கு, மத்திய சர்க்காரிலிருந்து குத்தகையை மாற்றி தொழில் சங்கத்திற்கு சொந்தமாக்கி, கூட்டுறவின் மூலம் தொழிலாளர்களை [illegible] திரு M. S. செல்வராஜை தலைவராக்கியும் 1949லேயே சோஷியலிசத்தை நடைமுறையில் செயல்படுத்திக் காட்டினர்.

நாடுகடத்தப்பட்ட இலங்கை இந்தியர்களுக்கென நாசரேத்தில் நூற்பு ஆலை அமைத்து புதிய சட்ட திட்டங்களுடன் தொழிலாளர்களுக்கு மில்லை சொந்தமாக்கினர் இவருடன் திரு. M. S. செல்வராஜன் அதிக பங்கு பெற்றர்.

தியாகிகளுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டுமென 1966 டிசம்பர் மாதம் சட்ட சபை காங்கிரஸ் கட்சியில் தீர்மானம் கொண்டு வந்தார். அப்போதைய முதல்வர் திரு. M. பக்தவத்சலம் அதை ஏற்றுக் கொண்டார்.

1970 செப்டம்பர் மாதம் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியில் தியாகிகளுக்கு மத்திய சர்க்கார் பென்ஷன் கொடுக்க வேண்டுமென தீர்மானம் கொண்டு வந்து பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தியை சம்மதிக்க செய்தார்.

1946முதல் 1967வரை சட்டசபை, மேல் சபை உறுப்பினராக இருந்தார் ஜமீன்தாரி ஒழிப்பு மசோதா, ஹிந்து மத பரிபாலன மசோதா, நிலச்சீர்திருத்த மசோதாக்களின் பொறுக்குக் கமிட்டி அங்கத்தினராக இருந்து பல சட்டங்கள் கொண்டுவர காரணமாக இருந்தவர்களில் இவரும் ஒருவர்.

புதுமை, தினச்செய்தி பத்திரிகை ஆசிரியராக இருந்தார். நெல்லை ஜில்லாவில் 4 தாலுகாக்கள் பயனடையும் மணிமுத்தாறு திட்டத்துக்கு பொதுமக்களிடம் ஒருகோடியே இருபத்தைந்து லட்ச ரூபாய் வசூலித்துக் கொடுத்து மணிமுத்தாரைக் கொண்டு வந்தார். 1948ல் புன்னக்காயலில் இருந்து ஆலந்தலை வரை 13 கிராமங்களுக்கு குடி தண்ணீர் திட்டத்தை கொண்டுவந்தார். ஜில்லா முழுவதும் கிராமம் கிராமமாக அவர் நுழைந்துஅரசியல் பணிஆற்றாத இடங்களே இல்லை எனலாம். கடும் உழைப்பும் விடா முயற்சியும், 'நெற்றிக்கண்ணை திறந்தாலும் குற்றம் குற்றமே'என்று சொல்லும் துணிவும் மிக்க அவர், தமிழக அரசியலில் தனக்கென ஒரு இடத்தை தேடி வைத்துக்கொண்டு சுறு சுறுப்பாக இன்றும் பணியாற்றிவருகிறார்.

அட்டைப்பட விளக்கம்

சுதந்திர ஜோதி சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. சுதந்திர ஸ்தூபி கம்பீரமாகக் காட்சி தருகின்றது. சுதந்திரம் பெறுவதற்கு காரணமாக இருந்தவர்கள் ஜோதியை—ஸ்தூபியைச் சுற்றி காட்சி தருகிறார்கள். அவர்களுக்கு விளக்கம் தேவையில்லை என்றாலும் இளம் தலைமுறையினர் மனதில் இடம் பெறட்டும் என்பதற்காக விளக்கம் தருகிறோம்!

இடமிருந்து வலம் (மேல் பாகம்)

நேருஜி, ராஜாஜி, காந்திஜி, வ. உ. சி., ஆசாத்

மேலிருந்து கீழ் (இடது பக்கம்)

பகவத்சிங், திருப்பூர் குமரன், P. S. ராஜகோபாலன், இந்திரா காந்தி, K. T. கோசல்ராம்.

மேலிருந்து கீழ் (வலது பக்கம்)

நேத்தாஜி, வாஞ்சிநாதன், காசிராஜன், காமராஜ், ஜகஜீவன்ராம்.

சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட தியாகிகளின் பட்டியல்

எம். ஸி. வீரபாகு, B. A., B. L.
சாத்தான்குளம்.
எம். ஆர். மேகநாதன்
பால் நாடார், பூச்சிக்காடு
எஸ். ரத்தினகுருசாமி நாடார், செங்குளி
பா. ஆறுமுகநயினர் நாடார், பூச்சிக்காடு
பாப்பா நாடார், மஞ்சள்விளை.
P. முத்து நாடார், மஞ்சள்விளை
து. முத்து நாடார், மஞ்சள்விளை
ப. நாராயண நாடார், பூச்சிக்காடு
L. பெரியசாமி நாடார், செங்குளி
பெ. துரைசாமி நாடார், குரங்கணி
R. ஜெயமணி நாடார், குரங்கணி
பொ. அப்பாவு நாடார், மாவீடுபண்ணை
சிவானந்தபெருமாள் நாடார்,
மஞ்சள்விளை
M. சுப்பு நாடார், மாவீடு பண்ணை
ராமகிருஷ்ண நாடார், மாவீடுபண்ணை
N. முத்தையா நாடார், குரங்கணி
N. அரசக்குமார் நாடார், குரங்கணி
சு. சாமுவேல் நாடார், மஞ்சள்விளை
பெ நல்லதம்பி நாடார், மஞ்சள்விளை
சு. வெள்ளையா சேர்வை, குரங்கணி
பெ. சங்கர நாடார், பூச்சிக்காடு
N. ரத்தினசாமி, நாடார், குரங்கணி
தொண்டர் ஆறுமுகநயினார்,
தண்டுபத்து
M A கருத்தையா நாடார்,
மாவீடுபண்ணை
P. துரைசாமி தேவர்,
வெள்ளரிக்காயூரணி
M. நல்லதம்பி நாடார், மூக்குப்பீறி
சுப்பையா தேவர், மூக்குப்பீறி
போத்தி ஜோசப் பர்னாந்து,
புன்னைக்காயல்
ரெமியாஸ் பர்னாந்து, புன்னைக்காயல்
செல்லையா பர்னாந்து, புன்னைக்காயல்
P. M. S. புகாரி, உடன்குடி
க. சுப்பிரமணிய நாடார், நாலுமாவடி

E. S. துரைராஜ், ஆறுமுகநேரி
குட்டையன், ராஜபதி
பா. ரத்ன நாடார், பூச்சிக்காடு
க. தங்கவேல் நாடார், பூச்சிக்காடு
நெல்லையப்பன், மாதவன்குறிச்சி
ஆ. தங்கசாமி நாடார்,
செவல்விளைபுதூர்
V. ஆறுமுக நாடார், தேரியூர்
S. A. தங்கையா நாடார், தேரியூர்
ச. கனிநாடார், சீர்காட்சி
P. பிரமுத்து நாடார், சீர்காட்சி
துரைசாமி நாடார், கொட்டங்காடு
சவரிமுத்து பர்னாந்து, குரும்பூர்
K. சிவானந்தம்—நாலுமூலைக் கிணறு
சுப்பிரமணியபிள்ளை, ஆத்தூர்
திருமதி S. A. தாயம்மாள்,
ஆறுமுகநேரி
கருப்பையா நாடார், ஆறுமுகநேரி
P. ராமபண்டாரத்தேவர்,
வெள்ளரிக்காயூரணி
பால்பாண்டிய நாடார், மணக்காடு
து. சித்திரைவேல்
பெ. சரவணப்பெருமாள்,
சிறுநாடார் குடியிருப்பு
S. V. மகாலிங்கம்
திருமதி. விருத்தாம்பாள்,
ஆழ்வார்திருநகரி
திருமதி S. பங்கஜம் அம்மாள்,
ஆழ்வார்திருநகரி
திருமதி. K. P. ஜானகி,
ஆழ்வார்திருநகரி
P. சங்கரசுப்பையர், திருச்செந்தூர்
கைலாசத்தேவர், கொழுவநல்லூர்
முத்தையா, சாத்தான்குளம்
ரொட்ரிகோ பர்னாந்து, சேர்ந்தமங்கலம்
ஆறுமுகநயினர் கோனர்,
திருச்செந்தூர்

திரு. T. V. காசிராஜன்

S/o. வெள்ளைய நாடார், முத்துகிருஷ்ணபுரம்
ஆறுமுகநேரி.

ஆறுமுகநேரி உப்புசத்தியாகிரகம், குலசேகரன்பட்டினம் லோன்துரை கொலைவழக்கு குலசேகரபட்டினம் வழக்கில் செக்ஷன்கள் 148/7 அவசரச்சட்டம் III/42ன் கீழ் 3 ஆண்டு கடுங்காவல். 326/149 அவசரச் சட்டம் 4ன் கீழ் ஒரு ஜென்மக் கடுங்காவல் 436/149 அவசரச் சட்டம் 4-ன் கீழ் ஒரு ஜென்மக் கடுங்காவல், 436/149 அவசரச் சட்டம் 4-ன் கீழ் இன்னொரு ஜென்மக் கடுங்காவல். 395/6 அவசரச் சட்டம் 4-ன் கீழ் மற்றுமோர் ஜென்மக் கடுங்காவல் தண்டனை ஆகியவற்றை உள்ளடக்கி செக்ஷன் 302/149 அவசரச் சட்டம் 4-ன் கீழ் முடிவாக மரண தண்டனை. திருச்செந்தூர், கொக்கிரகுளம் சப்ஜெயில்கள் கொக்கிரகுளத்தில் 'சாக்கு சட்டை' 'நிலை விலங்கு' 'கசையடி' தண்டனை மதுரை மத்திய சிறைத் தூக்குத் தண்டனைக் கொட்டறையில் 2 ஆண்டு 7 மாதம் பின்னர் திருச்சி மத்திய சிறை, அலிப்புரம், சென்னை மத்திய சிறை, ஜெனரல் ஆஸ்பத்திரியில் சில காலம் 1946 கடைசியில் இறுதியாக விடுதலை மத்திய மாநில சர்க்கார் பென்ஷன் பெறுகிறார் மனைவி பெயர்: இரத்தினவதி, மூன்று பெண்களும் இரண்டு ஆண்களும் இருக்கிறார்கள்.



திரு. P. ராஜகோபாலன்,

S/o. பெரிய நாடார், ஆறுமுகநேரி.

ஆறுமுகநேரி உப்பளச்சட்ட உடைப்பு வழக்கில் 18 மாத கடுங்காவல். பின்னர் அது 6 மாதமாகக் குறைக்கப்பட்டது. குலசேகரபட்டினம் வழக்கில் செக்ஷன்கள் 148/7 அவசரச் சட்டம் III/42ன் கீழ் 3 ஆண்டு கடுங்காவல் 326/149 அவசரச் சட்டம் 4-ன் கீழ் ஒரு ஜென்மக் கடுங்காவல். 436/149 அவசரச் சட்டம் 4-ன் கீழ் இன்னொரு ஜென்மக் கடுங்காவல். 395/6 அவசரச்சட்டம் 4-ன் கீழ் மற்றுமோர் ஜென்மக் கடுங்காவல் தண்டனை ஆகியவற்றை உள்ளடக்கி செக்ஷன் 302/149 அவசரச்சட்டம் 4-ன் கீழ் முடிவாக மரண தண்டனை. திருச்செந்தூர், கொக்கிரகுளம், சப்ஜெயில்கள் கொக்கிரகுளத்தில் 'சாக்குச் சட்டை' 'நிலைவிலங்கு' 'கசையடி' தண்டனை. மதுரை மத்திய சிறை தூக்குத் தண்டனைக் கொட்டறையில் 2 ஆண்டு 7 மாதம் பின்னர் திருச்சி மத்திய சிறை. அலிப்புரம், சென்னை மத்திய சிறை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சில காலம் 1946 கடைசியில் இறுதியாக விடுதலை மனைவிபெயர்: சித்திரவடிவம்மாள் இருபெண்களும் இரு ஆண்களும் உள்ளனர். இவர் ஒரு சிறந்த பத்திரிகையாளர்.

திரு. S. T. ஆதித்தன், B.A., B.L., M.L.C
(S. தையலபாக ஆதித்தன்)

S/o. திரு சிவந்தி ஆதித்தன், காயாமொழியில் 27—5—1904ல் பிறந்தார். வயது 69. மனைவியின் பெயர் ஜமிலாபாய். 1941ல் தனிநபர் சத்யாகிரகத்தில் ஈடுபட்டதற்காக திருச்செந்தூரில் கைது செய்யப்பட்டு, தூத்துக்குடி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டால் 4 மாதம் கடுங்காவல் தண்டனை அனுபவித்தார். மதுரை மத்யசிறையில் தண்டனையை அனுபவித்தார் மத்ய சட்டசபையில் 1945 முதல் 1947 முடிய மெம்பராக இருந்தார். 1952 57ல் சென்னை அசெம்பிளியிலும் 1958-61ல் தமிழ்நாடு மேல் சபையிலும் மெம்பராக இருந்தார். ஆலயப் பிரவேச இயக்கத்தில் தீவிர பங்குகொண்டவர். 1970 முதல் தமிழ்நாடு மேல் சபை மெம்பராக இருக்கிறார்.



திரு. எஸ். என். சோமயாஜுலு (71)
S/o. அ சோமசுந்தரம் அய்யர்,
5½ F பெருமாள்புரம், திருநெல்வேலி-7

1927ல் நீலன் சிலை சத்தியாகிரகத்தில் பொ ஞாம்பூர் சிறையில் 15 மாதங்கள் 1930-ல செக்ஷன் 3 ஆர்ட் 22 of 1922ன்படி கடலூர் சிறையில் 6 மாதம் 20 நாட்கள். 1930ல ஐ. பி. ஸி. 124-Aன் கீழ் மதுரை சிறையில 3 வருடம். 1932ல் ஐ. பி. ஸி 147ன் கீழ் மதுரை, கடலூர், வேலூர் சிறைகளில் 2 வருடம் 10 மாதங்கள். 1940ல் இந்திய பாதுகாப்புச் சட்டப்படி வேலூர், சென்னை சிறைகளில் 7மாதம் 26நாட்கள் 1942ல் பாதுகாப்புக் கைதியாக 2வருடம் ஆக மொத்தம் 10 வருடம் 2 மாதம் 15 நாட்கள் தள்ளுபடி 3 வருடம் 6 மாதம் 19 நாட்கள் நீக்கி சிறையிலிருந்தது மொத்தம் 6 வருடம் 7 மாதம் 26 நாட்கள். மத்திய மாநில பென்ஷன் பெறுகிறார் மனைவி பெயர் மீனாக்ஷி சோமயாஜுலு இரண்டு ஆண்களும் மூன்று பெண்களும் இருக்கிறார்கள்: 1921ல் இருந்து அரசியலில் ஈடுபாடு உண்டு. சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். சுதந்திர போராட்ட வீரர்கள் மாநிலசங்கத் தலைவராக இருந்து பணியாற்றி வருகிறார்.



திரு. M. S. செல்வராஜன்

S/o. சண்முகசுந்தர நாடார் கீழவீடு

ஆறுமுகநேரி.

1942 ஆகஸ்டு இயக்கத்தில் ஆறுமுகநேரி கீரனூர் உப்பு சத்தியாகிரகம். 1942 செப்டம்பர் மாதத்தில் ஆறுமுகநேரியில் முதன் முதலாகக் கைது செய்யப்பட்டு 15 பேருடன் போலீஸ் வானில் ஏற்றிச்சென்றபோது 'வந்தே மாதரம்' 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று கோஷித்ததற்காக வானிலேயே போலீசாரின் குண்டாந்தடி தாக்குதல். திருச்செந்தூர் சிறையில் மூர்ச்சையாகும் வரை விரல்கள் ஒடியும்படி மடக்குதல், ரோமங்களை பிடுங்குதல், கைகளைப் பின்புறமாக மடக்கி முதுகில் செங்கல்லுடன் சேர்த்துக்கட்டி, செங்கல்லில் தண்ணீர்விட்டு கட்டை இறுக்கி சித்திரவதை செய்தல். திருச்செந்தூர், கொக்கிரகுளம் சப்ஜெயில்களில் 2½ மாதம் அலிப்புரம் ஜெயில் 6 மாதம் மனைவி பெயர் லக்ஷ்மிபாக்கியம் ஐந்து பெண்களும், மூன்று ஆண்களும் இருக்கிறார்கள்.



தியாகி



தியாகி

திரு R. தங்கையா



திரு. தங்க நாடார் (70)

S/o. கந்தசாமி நாடார், நாதன்கிணறு. 1942 போராட்டம் கள்ளுக்கடை தீ வைப்பு. திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், கொக்கிர குளம் சிறைகளில் 6½ மாதங்கள் மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி : அருணாசல வடிவம்மாள். விவசாயம்



திரு. சொ. சேதுராமலிங்கம் பிள்ளை (65)

S/o சொக்கலிங்கம் பிள்ளை. ஆழ்வார்திருநகரி கள்ளுக்கடை மறியல். அந்நிய துணி பகிஷ்காரம். திருச்சி, கடலூர் சிறைகளில் 27 மாதம். இரு பென்ஷன்கள் பெறுகிறார். மனைவி: காந்திமதி அம்மாள். ஒரு மகன் இருக்கிறார்.



திரு ஆ. சிவபெருமான் (65)

S/o ஆதிநாராயண நாடார், சான்றோர்பாளையம், பூந்தமல்லி ஹைரோடு. சென்னை ஆறுமுகநேரி கீரனூர் உப்பு சத்தியாக்கிரகம் அலிப்புரம் சிறையில் 6 மாதம். இரு பென்ஷன்களும் பெறுகிறார். கலப்புத் திருமணம். மனைவி : பாப்பம்மாள். ஏழு குழந்தைகள்,



திரு. ந. சின்னக்கனி நாடார் (63)

S/o. நயினார் நாடார், குரங்கணி. சர்க்கார் காடுகளை அழித்தல். திருச்செந்தூர், தூத்துக்குடி ஜெயில்களில் 22 நாள். அபராதம் ரூ. 30. மனைவி: சொர்ணம்மாள் 5 பெண்களும் ஒரு ஆணும் உள்ளனர்.



திரு. T. N. மகரபூஷணம்

தென்திருப்பேரை. 1932,சத்தியாகிரகம். '33ல் சென்னையில் பாஷ்யம் அய்யங்கார் சிலை முன் நடந்த மாநாட்டில் பங்கு கொண்டு சிறை சென்றவர். 1941 \தனி நபர் சத்தியா கிரகம். போலீசின் அடக்குமுறைக்கு ஆளாகி ஒரு வாரம்வரை மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு துன்புற்றவர் நெல்லை மித்திரன், 'காங் கிரஸ் புல்லட்டின் பத்திரிகைகளில் தொடர்பு கொண்டவர். மாநில பென்ஷன் பெறுகிறார்.

திரு. மு. அருணாசலம் (53)

S/o. முத்துமாலை நாடார், செட்டியாபத்து தந்தி கம்பி வெட்டு, உப்பு அள்ளியது, கள்ளுக்கடை தீ வைப்பு, மெஞ்ஞானபுரம் தபால் ஆபீஸ் தாக்குதல், லோன்துரை கொலை வழக்கு. திருச்செந்தூர், கொக்கிரகுளம், தூத்துக்குடி, ஸ்ரீ வைகுண்டம் சிறையில் 20 மாதங்கள். மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி: வெள்ளைத்தங்கம். 4 பெண்களும் ஒரு ஆணும் உள்ளனர்



திரு. மா. ஆ. அய்யம்பெருமாள் (48)

S/o. ஆழ்வார் நாடார், ஆழ்வார்திருநகரி. சர்க்கார் மரங்களை வெட்டியது. தூத்துக்குடி சப்ஜெயில். மனைவி: ராஜகனி. 7 பெண்களும், 2 ஆண்களும் உள்ளனர். மரக்கடை வியாபாரம்.



திரு. ஞா. தங்கப்பாண்டியன்நாடார் (68)

S/o. ஞானமுத்து நாடார், செங்குளி. ஆகஸ்டு போராட்டம் கள்ளுக்கடை தீ வைப்பு திருச்செந்தூர், தூத்துக்குடி, கொக் கிரகுளம் சிறைகளில் 6 மாதங்கள் மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி: சுந்தரம்மாள்

திரு. R செல்லத்துரை

தண்டுபத்து. பத்திரிகை ஆசிரியர், சென்னை குலசேகரன்பட்டணம் லோன்துரை கொலை வழக்கில் நான்காவது ஜென்ம தண்டனை விதிக்கப்பட்டு தண்டனை காலத்தை அலிப்புரம் முகாம் சிறையில் 1946வரை அனுபவித்தார்.

திரு. தங்கையா நாடார் (57)

S/o. ராமையா நாடார், உடன்குடி. குலசை லோன்துரை கொலை வழக்கில் 2வருடம் அலிப்புரம் ஜெயில் பென்ஷன் எதுவும் பெறவில்லை. மனைவி: சுந்தரம்மாள் 2 ஆண்களும் 5 பெண்களும் உள்ளனர்.

திரு. கு முத்துமாலை நாடார் (60)

S/o. [illegible] நாடார், குரங்கணி. சுதந்திர போராட்டம் திருச்செந்தூர் சிறையில் 21 நாள். மனைவி [illegible] அம்மாள் 5 ஆண்கள் 2 பெண்கள். விவசாயம்.

திரு. ப பொன்னையா நாடார்

[illegible] தந்தி கம்பி அறுத்தல் கள்ளுக்கடை தீ வைப்பு [illegible] தீ வைப்பு. போலீஸை பிடித்து வைத்துக்கொண்டது திருச்செந்தூர், கொக்கிரகுளம் சப் ஜெயில்களில் 22 மாதங்கள்.

திரு. பால்பாண்டி நாடார் (லேட்)

S/o வெள்ளைய நாடார், மணக்காடு. 1942ல் கள்ளுக்கடை மறியல். கள்ளுக்கடையை தீ வைக்கப் போனதாக குற்றம் சாட்டி திருச்செந்தூர் சப் ஜெயிலில் 3 மாதம். பென்ஷன் பெறவில்லை. மனைவியும் 4 ஆண்களும் உள்ளனர்.

திரு. M. தங்கப்பழம்

வடக்குத் தெரு, மூக்குப்பீரி. தந்திக் கம்பி வெட்டு. தூத்துக்குடி, திருச்செந்தூர் சிறையில் 8 மாதங்கள்.

திரு. த லெக்ஷ்மண நாடார் (52)

S/o. தங்கவேல் நாடார், செல்வராஜபுரம், ஆறுமுகநேரி. ஆறுமுகநேரி கீரனூர் உப்பு சத்தியாகிரகம். திருச்செந்தூர், கொக்கிரகுளம் சப் ஜெயில், அலிப்புரம் சென்ட்ரல் ஜெயில் 6 மாதங்கள். மாநில பென்ஷன் பெறுகிறார். கலப்பு மணம். மனைவி: பகவதி. (ஹரிஜன்) ஒரு மகனும், மகளும் இருக்கிறார்கள் விவசாயம்

திரு. நடராஜ பிள்ளை (லேட்)

S/o: ராமலிங்கம் பிள்ளை, ஆத்தூர். கள்ளுக்கடை மறியல் மதுரை மத்திய சிறையில் 3 மாதங்கள். பென்ஷன் பெறவில்லை மகன் ராமலிங்கம் சிவகிரியில் கம்பவுண்டராகப் பணியாற்றுகிறார்

திரு. R. வெங்கிட்டராம முதலியார் (லேட்)

S/o. ராமநாராயண முதலியார், காயல்பட்டினம் கள்ளுக்கடை மறியல் கர்ணம் வேலையை ராஜினாமா செய்தது. கொக்கிரகுளம் சப் ஜெயிலில் 4 மாதம், திருச்சி சென்ட்ரல் சிறையில் ஒரு வருடம் கடுங்காவல். மாநில பென்ஷன் பெறுகிறார் மனைவி: சுந்தரத்தம்மாள 2 ஆண்களும், 4 பெண்களும் உள்ளனர்.

திரு. சி. ஆறுமுக பாண்டியன் (52)

S/o. சிற்றம்பல நாடார், படுக்கபத்து காயாமொழி. [illegible] சத்தியாகிரகம் ஆட்சேபகரமான பிரசுரம் சப்மாஜிஸ்திரேட்டை ராஜினாமா செய்யச் சொன்னதற்காகவும், திருச்செந்தூர், தூத்துக்குடி, அலிப்புரம் ஜெயிலில் 2½ வருடம் ரூ. 25 அபராதம். பென்ஷன் பெறவில்லை. மனைவி: சிவராஜமணி. ஒரு பெண்ணும் ஒரு ஆணும் உள்ளனர் விவசாயி.

திரு. அ. நயினார் ஆசாரி (லேட்)

S/o. அருணாசலம், காந்தி தெரு, ஆறுமுகநேரி. ஆறுமுகநேரி, கீரனூர் உப்பு சத்தியாகிரகம். திருச்செந்தூர், கொக்கிரகுளம், அலிப்புரம் ஜெயில்களில், 6மாதங்கள். மாநில மத்திய அரசு பென்ஷன் பெறுகிறார். மனைவி: ஈஸ்வர வடிவு 3 பெண்களும், ஒரு ஆணும் உள்ளனர்.



திரு. த. தங்கவேல் (70)

S/o. ரா. தவசிமுத்து நாடார், சுப்பிரமணிய சுவாமி கோவில தெரு, ஆறுமுகநேரி. 1942ல் உப்பு சத்தியாகிரகம் ஆறுமுகநேரி நகர காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்து போராட்ட வீரர்களுக்கு ஊக்கம் கொடுத்து பொருளுதவி செய்தது. உப்பு சத்தியாகிரகத்தில் 6 மாத தண்டனை மெஞ்ஞானபுரம் தபாலாபீசை கொளுத்திய பொய் கேஸ் விசாரணைக்காக திருசசெந்தூர். ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி, கொக்கிரகுளம், சப்ஜெயில்களில 20 மாதங்கள். முதல் மனைவி பெயர்: வெள்ளையம்மாள், 2வது மனைவி பெயர்: சண்முகக்கனி அம்மாள் மனைவியும் [illegible] ஆண்களும் இரண்டு பெண்களும் இருக்கிறார்கள். 20 வருட காலம் தாலுகா காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்திருக்கிறார் காங்கிரஸ் கட்சி வேலையில் ஈடுபட்டிருக்கும் இவர் திருச்செந்தூர் தாலுகா சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்கத் தலைவராகவும் இருந்து பணியாற்றுகிறார் மாநில மத்திய சர்க்கார் பென்ஷன் பெறுகிறார்.



திரு. வெள்ளத்துரை நாடார் (60,

S/o. சுடலைக்கனி நாடார், மஞ்சள்விளை. சர்க்கார்காடுகளை அழித்தல் திருச்செந்தூர், தூத்துக்குடி சப்ஜெயில் ரூ. 20 அபராதம் பிரம்மச்சாரி. மலபார் போலீசாரால் தாக்கப் பட்டதால் காது மந்தமாகி, கண் பார்வையும் குறைந்திருக்கிறது.



திரு. ச. அருணாசல நாடார் (50)

S/o. சண்முக நாடார், ஆறுமுகநேரி, வியாபாரம். சென்னை. 1942 கீரனூர் உப்பு சத்யாகிரகம் 6 மாத தண்டனை. மாநில பென்ஷன் பெறுகிறார் மனைவி. ஜெயலட்சுமி 4 ஆண்களும் 3 பெண்களும் உள்ளனர்.

திரு டேவிட்செல்லத்துரை நாடார் (லேட்)

S/o. பொன்னையா நாடார், மேலப்புதுக்குடி. குரும்பூர் ரயில் நிலையம் தீ வைப்பு, திருச்செந்தூர், கொக்கிரகுளம் சிறையில் 21 மாதம் ரிமாண்ட். பென்ஷன் பெறவில்லை. ஒரு ஆணும் 2 பெண்ணும் இருக்கிறார்கள்.



திரு. சுடலைமணி நாடார்

S/o பொன்னையா நாடார், குரங்கணி. கள்ளுக்கடை மறியல், மரம் வெட்டு. சப்கலெக்டரை நாட்டை விட்டு வெறுயேறு. வெளியேருவிட்டால் சுடுவோம் என்று நோட்டீஸ் போட்டது அலிப்புரம் கேம்ப சிறையில 9 மாத தண்டனை. பென்ஷன் பெறுகின்றார் ஒரு மகனும் மகளும் இருக்கிறார்கள் விவசாயம்.



திரு. S. முத்துபட்டவராயன் (58)

S/o சங்கரலிங்கம் பிள்ளை, திருச்செந்தூர். 1942ல் போலீஸ் அதிகாரிகளை ராஜிநாமா செய்துவிட்டு சுதந்திர போராட்டத்தில் பங்கு பெறும்படி கேட்டதற்காக அலிப்புரம் பெல்லாரி சென்ட்ரல் ஜெயிலில் ஒரு வருட தண்டனை. ரூ. 500 அபராதம். மத்திய சர்க்கார் பென்ஷன் பெறுகிறார் மனைவி முத்து [illegible] அம்மாள் ஒரு மகன் இருக்கிறார். ஆசிரியராகப் பல வருடகாலம் பணியாற்றிய வர் 28.5.73ல் ஓய்வு பெறுகிறார்.



திரு. சி. முத்துசாமி நாயுடு: (70)

S/o. சின்னச்சாமி நாயுடு, ஆத்தூர். கள்ளுக்கடை, ஜவுளிக்கடை மறியல், தனி நபர் சத்தியாக்கிரகம். மதுரை சிறையில் 3 மாதம். மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி: சங்கரம்மாள்.



திரு. K ஆறுமுகசாமி நாடார் (81)

S/o. கந்தசாமி நாடார், பூச்சிக்காடு கள்ளுக்கடை தீவைப்பு கொக்கிரகுளம், திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி சப் ஜெயில்களில் 7 மாதம். மாநில பென்ஷன் பெறுகிறார் மனைவி: பாலம்மாள் 4 ஆண்களும் ஒரு பெண்ணும் உள்ளனர். விவசாயம்



திரு. ஆ. அய்யாத்துரை நாடார்

S/o ரா ஆறுமுக நாடார், குரங்கணி, சர்க்கார் காடுகளை அழித்தல், தூத்துக்குடி சப் ஜெயிலில் 22 நாட்கள் ரிமாண்ட். அபராதம் கட்டிய ரு. 20 சுதந்திரம் கிடைத்த பின் வாபஸ் தரப்பட்டது ஒரு மகள் மட்டும் இருக்கிறார். விவசாயம்.

திரு. மூ. உத்திர நாடார் (57)

S/o. மூக்க நாடார், மஞ்சள்விளை டுவிபுரம் மேல்பாகம், தூத்துக்குடி-3

சர்க்கார் காடு அழிப்பு திருச்செந்தூர், தூத்துக்குடி. மதுரை ஜெயில்களில் 6 மாதம் பென்ஷன் பெறவில்லை. மனைவி: கனியம்மாள் 2 ஆண்களும் ஒரு பெண்ணும் உள்ளனர்.



திரு. S. சோமசுந்தரம் பிள்ளை (74)

S/o. சுப்பிரமணிய பிள்ளை ஆறுமுகநேரி. உப்பு சத்தியாகிரகம். குரும்பூர் ரயில் நிலையம் தீ வைப்பு அலிப்புரத்தில் 6 மாதம் மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி. சந்திரா: ஒரு பெண் இருக்கிறார். பத்திரிகை விற்பனையாளர்

திரு. B. மகராஜன் (53)

S/o. பாலையா நாடார், நாதன்கிணறு. கள்ளுக்குடித்தவர்களை 'க' போட்டு மொட்டை அடித்து கழுதையில் வைத்து ஊர் சுற்றிய வழக்கு. காடு அழிப்பு. திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், கொக்கிரகுளம், தூத்துக்குடி சிறைகளில் 6 மாதம் 28 நாள். மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி: சிவசுந்தரபார்வதி 4 பெண்களும் ஒரு ஆணும் உள்ளனர்.



திரு. T. K. கிருஷ்ணன் (68)

S/o. குழைக்காதய்யங்கார் தென்திருப்பேரை காங்கிரஸ் சர்வாதிகாரி கள்ளுக்கடை அந்திய துணிக்கடை மறியல். திருச்சி, வேலூர் சிறைகளில 18 மாத கடுங்காவல் தண்டனை ரூ. 500 அபராதம் வசூலிக்கப்பட்டது. [illegible] இருக்கிறார்.

திரு. அய்யங்கண் நாடார் (55)

S/o. அய்யங்கண் நாடார், தளவாய்புரம். கள்ளுக்கடை மறியல். திருச்செந்தூர் சப்ஜெயிலில் 13 நாட்கள் அபராதம் ரூ. 50. மனைவி பாப்பாள். 4 பெண்களும் 1 ஆணும் உள்ளனர் விவசாயம்.

திரு. எம். சுந்தரலிங்கம் (53)

S/o முத்துசாமி தேவர், திருச்செந்தூர். 1940 தனிநபர் சத்தியாகிரகிகளுக்கு உதவியதால் ஆசிரியர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் 1942 ஆகஸ்டு போராட்டம் தந்தி கம்பி வெட்டு, உப்பள சத்தியாகிரகம், கள், சாராயக் கடை கேஸ் கொக்கிரகுளம் திருச்செந்தூர், அலிப்புரம், ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி சிறைகள். மொத்தம் 2 வருடம் 10 மாதங்கள் மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி புஷ்பவல்லி 3 ஆண்களும் 2 பெண்களும் உள்ளனர்.

திரு. காளியப்பன் (56)

S/o. வயிரமுத்து பண்ணையார், குலசேகர பட்டினம் ஒத்துழையாமை இயக்கம், அந்நிய துணி பகிஷ்காரம், தனிநபர் சத்தியாகிரகம் ஆகஸ்டு போராட்டம் திருச்செந்தூர், மதுரை ஸ்ரீவைகுண்டம் பாளை. ஜெயில்களில் 95 நாட்கள் மனைவி: சுந்தரத்தம்மாள். மகன் இருக்கிறார்.



திரு. M. K. மங்களா பொன்னம்பலம்

S/o. மங்களா கந்தசாமி நாடார்,
படுக்கப்பத்து

காந்திஜி நடத்திய தனிப்பட்ட நபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு உடன்குடியில் கைது செய்யப்பட்டு ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டார்.

சாத்தான்குளத்தில் அப்பொழுது இருந்த சப் மாஜிஸ்திரேட்டைச் ராஜிஞயா செய்யச் சொல்லி வற்புறுத்தியதாகவும் பலவந்தப் படுத்தியதாகவும், தூத்துக்குடி சப் கலெக்டர் கோர்ட்டில் பாதுகாப்பு சட்டம் 34 (6) B 38 (5) ஒரு வழக்கும், 38 (1) சட்டப்படி இன்னொரு வழக்கும் தொடர்ந்தார்கள். இந்த வழக்கில் 3 ஆண்டுகள் 17—10—42ல் தண்டனை விதிககப்பட்டது. அந்த சமயத்திலே மூக்குப்பேரி தந்திகம்பி வெட்டு வழக்கு குரும்பூர் ரயில்வே ஸ்டேஷன் தீக்கொளுத்திய வழக்கு மெஞ்ஞானபுரம் போஸ்டாபீஸ் தீக்கொளுத்திய வழக்கு ஆகியவை விசாரணையில் இருந்தது. மூன்று வழக்கின் விசாரணைக்காக 21 மாதம் விசாரணைக் கைதியாக பல சப் ஜெயிலில் இருந்தார். இந்த வழக்கு முடிந்த உடன் 28—4—44ல் ஆந்திராவிலுள்ள மத்திய ஜெயிலிலிருந்து விடுதலை அடைந்து அதே இடத்தில் மீண்டும் பாதுகாப்புகைதியாக கைதுசெய்யப்பட்டு வேலூர் மத்திய சிறையில் 10—5—45ல் சிறை வைக்கப்பட்டார். பிரிட்டிஷாருக்கும் இந்திய தேசிய காங்கிரசுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி பின்னர் விடுதலையானார்.



திரு. சிவலிங்க பண்டிதன் (50)

S/o. பிச்சை பண்டிதன், செங்குளி. 1942 போராட்டம். கள்ளுக்கடை மறியல் திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், கொக்கிரகுளம் சிறைகளில் 6½ மாதங்கள். மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி : பூமணி அம்மாள். 4 ஆண்களும், 2 பெண்களும் உள்ளனர்.

திரு. க. தங்கவேல் நாடார் (லேட்)

S/o கந்தசாமி நாடார், பூச்சிக்காடு. ஆகஸ்டு போராட்டம் கள்ளுக்கடை தீ வைப்பு, பாரஸ்டு கேஸ். திருச்செந்தூர், தூத்துக்குடி, அலிப்புரம் சிறைகளில் 30 மாதங்கள் மாநில-மத்திய அரசு பென்ஷன் கிடைக்கிறது. மனைவி பெயர்: தங்கம்மாள்.

திரு சோ. ஆ. தங்கையா ஆசீர்வாதம் நாடார் (லேட்)

S/o ஆபிரகாம் நாடார், தேரியூர், உடன்குடி குலசை சதிவழக்கு, கொக்கிரகுளம் சிறையில் 4 மாதம் 6 நாட்கள். பென்ஷன் கிடைக்கவில்லை. மனைவி : பராசக்தி அம்மாள். 2 ஆண்களும் 3 பெண்களும் உள்ளனர்.



திரு. வி. மந்திரம்

31, சுவர்க்கவாசல்தெரு சி. என். கிராமம்,
திருநெல்வேலி-6

1942ல் காலன்குடியிருப்பு செட்டியாபத்து, கொட்டங்காடு போன்ற ஊர்களில உள்ள கள்ளுக்கடைகளுக்குத் தீ வைத்தது. மெஞ்ஞானபுரம் தபால் நிலையத்தைத் தாக்கி தீ வைத்தது.

லோனே கொலை செய்ததாக வழக்கு. ஜென்மதண்டனை அலிப்புரம் கேம்ப் ஜெயிலில்

ஆந்திர கேசரி கனம பிரகாசம் சென்னையில முதல அமைச்சராக இருந்தபோது 10—4—1946 இல் யாவரையும் விடுதலை செய்தனர். மாநில பென்ஷன் கிடைக்கிறது. மனைவி இசாமு அம்மாள். 5 பெண்களும் 3 ஆண்களும் இருக்கிறார்கள்.

திரு. ரா. நடராஜன்

S/o. ராமையா நாடார், ஆறுமுகநேரி
56, வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை-24

ஆறுமுகநேரி உப்பு சத்தியாகிரகம் குரும்பூர் ரயில் நிலையம் எரிப்பு வழக்கு. திருச்செந்தூர் கொக்கிரகுளம், தூத்துக்குடி சப் ஜெயில்களில் 1½ வருடம் ரிமாண்ட். பின்னர் பாதுகாப்புக் கைதியாக தஞ்சாவூர் விசேஷ சிறைச்சாலையில் 7½ மாதம், வேலூர் மத்திய சிறையில் 8½ மாதம் 29—8—1945ல் விடுதலை.

ஆறுமுகநேரி கிராம காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகவும், உப்புத் தொழிலாளர் சங்க காரியதரிசியாகவும் பணியாற்றியவர் தற்சமயம் சென்னையில் இருக்கிறார்.

கூட்டு அபராதம் விதிக்கப்பட்ட கிராமங்கள் !!

குரும்பூர் ஸ்டேஷனை எரித்ததற்காகவும், சர்க்கார் காடுகளையும் உடமைகளையும் அழித்ததற்காகவும் கூட்டு அபராதம் விதிக்கப்பட்ட கிராமங்கள் :

நாலுமாவடி, அங்கமங்கலம், புறையூர், ஆறுமுகநேரி,

பூச்சிக்காடு, நாதன்கிணறு, செங்குழி, நாங்கணி.

வசூலிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை ரூ. 14,500.

சுதந்திரத்திற்குப்பின் திரும்பக் கொடுக்கப்பட்டது.



திரு. மறைத்திரு. டாக்டர் பால் ராமசுவாமி
பி ஏ;எம்.டி எச்

S/o. ரு. பொன்னையா, சாத்தான்குளம் 1930ல் காந்திஜி தண்டி யாத்திரை சென்ற போது திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரி பி. ஏ. பரீட்சையை ஒரு வருடம் துறந்து மறியல் செய்து 144ஐ மீறி இ. பி. கோ 188வது செக்ஷன்படி திருச்சி மத்திய ஜெயில், அலிப்புரம் கேம்ப் ஜெயில்களில் 6 மாதம் கடுங் காவல். மத்திய சர்க்கார் பென்ஷன் பெறுகிறார். மனைவி: பிளேரா ராமசுவாமி. 3 பெண்களும் ஒரு ஆணும் உள்ளனர். பல வருடம் ஆசிரியராக இருந்து 1940ல் குருப் பட்டம் பெற்றவர்.



திரு. பி. தங்கராஜன்

S/o. பிரமுத்து நாடார், ஆறுமுகநேரி. 12. சிவப்பிரகாச முதலி தெரு, சென்னை-17. 1942 உப்பு சத்தியாகிரகம், திருச்செந்தூர். கொக்கிரகுளம். அலிப்புரம் கேம்ப் ஜெயில்களில் 6 மாதம். மத்திய-மாநில சர்க்கார் பென்ஷன் பெறுகிறார். மனைவி: சண்முக சுந்தரி.



தியாகி
ஸ்தாணுதிபதி அய்யர்

திரு. F. P. தங்கவேலன்

ஆறுமுகநேரி. சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டு பல காலம் தலைமறைவாக இருந்தவர். மனைவி: தங்கம்மாள். சென்னையில் வியாபாரம்

திரு. சு. பொ. காசிராஜன் (46)

S/o. பொன்னுசாமி நாடார், ஆறுமுகநேரி. ஆறுமுகநேரி கீழுர் உப்பு சத்தியாகிரகம் செங்கற்பட்டு மைனர் ஜெயிலில இரண்டு வருடம். மத்திய சர்க்கார் பென்ஷன் பெறுகிறார். மனைவி: பாலசுந்தரி 4 ஆண்களும் 2பெண்களும் உள்ளனர். தற்சமயம் சென்னையில் போலீஸ்கான்ஸ்டேபிளாக பணிபுரிகிறார்.



திரு. M. பொன் நாடார் (51)

S/o. மூக்க நாடார், குரங்கணி

சர்க்கார் காடு அழித்தல், தூத்துக்குடி சப் ஜெயிலில் 3 மாதம். அபராதம் ரூ. 23. சுதந்திரத்துக்குப் பின் வாபஸ் பெறப்பட்டது பென்ஷன் இல்லை. மனைவி: கல்யாணி அம்மாள் 5 ஆண்களும் 2 பெண்களும் இருக்கின்றனர். ஸ்ரீவைகுண்டம் பஞ்சாயத்து யூனியனில் சமூக நல ஊழியராகப் பணியாற்றுகிறார்.



திரு. பா. நடேச நாடார் (51)

S/o பாலையா நாடார், நாதன்கிணறு

சென்னை கள்ளுக்கடை மறியல் திருச்செந்தூர், தூத்துக்குடி, கொக்கிரகுளம், ஸ்ரீவைகுண்டம் சிறைகளில் 6 மாதம். பென்ஷன் பெறவில்லை. மனைவி: சண்முகக்கனி அம்மாள் 4 ஆண்களும் ஒரு பெண்ணும் உள்ளனர் வியாபாரம்.



திரு. M. சண்முகசுந்தரம் (45)

S/o. மாரிமுத்து நாடார், நாதன்கிணறு.
மைலாப்பூர், சென்னை.

பூச்சிக்காடு கள்ளுக்கடை மறியல். ஸ்ரீவைகுண்டம், கொக்கிரகுளம், திருச்செந்தூர் சப் ஜெயில்களில் விசாரணைக்கைதியாக 5½ மாதம் பென்ஷனுக்கு மனுச் செய்யவில்லை. மனைவி: ஜெயசுந்தரி ஆண் 1, பெண்கள் 3.



திரு. வே. செல்லத்துரை நாடார் (51)

S/o வேலாயுதநாடார். பூச்சிக்காடு பாரஸ்ட் கேஸ், கள்ளுக்கடை தீ வைப்பு. திருச்செந்தூர் சப்ஜெயிலில் 99 நாள் ரிமாண்ட் அபராதம் ரூ. 30. மனைவி தமயந்தி. மகனும் 2 மகளும் உள்ளனர்.



திரு. சண்முக நாடார் (57)

S/o. பெரியசாமி நாடார், பூச்சிக்காடு பாரஸ்ட் கேஸ் திருச்செந்தூர் சப்ஜெயிலில் 40 நாள் ரிமாண்ட் அபராதம் 30ல் ரூ. 20 வாபசானது. மனைவி வெள்ளத்தாயம்மாள் ஏழு. ஆண்கள் உள்ளனர். விவசாயம்.



திரு பிச்சை என்ற ஆறுமுகம்

S/o வீரபாகு நாடார், மன்னன் நகர், பூச்சிக்காடு கள்ளுக்கடை மறியல், தீ வைத்தல், கள் குடித்தவர்களை அவமானப் படுத்தல் திருச்செந்தூர், தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் கொக்கிரகுளம் சிறையில் 6 மாதம் ரிமாண்ட். மாநில பென்ஷன் பெறுகிறார். முதல் மனைவி செல்லம்மாள் (லேட்) மகனும் மகளும் இரண்டாவது மனைவி பொன்னம்மாள், இரண்டு மகன்கள் உள்ளனர். விவசாயம்.



திரு. க. பொன்சாமி நாடார் என்ற நயினார் நாடார் (68)

S/o கந்தசாமி நாடார், பூச்சிக்காடு கள்ளுக்கடை தீ வைத்தல் திருச்செந்தூர், தூத்துக்குடி கொக்கிரகுளம் சிறையில் 30 மாத தண்டனை. மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி வெள்ளையம்மாள். 5 ஆண்களும் 3 பெண்களும் உள்ளனர். விவசாயம்.

திரு D. தர்மம்கோயில் பிள்ளை (50)

S/o. தாசன் நாடார், உடன்குடி, ஞானராஜ் நகர், நாசரேத்.

குலசேகரபட்டினம் லோன்துரை கொலை வழக்கில் ஆயுள்தண்டனை திருச்செந்தூர், கொக்கரகுளம், அலிப்புரம் சிறை, மத்திய-மாநில சர்க்கார் பென்ஷன் பெறவில்லை. சமூக நல ஊழியராக பணியாற்றுகிறார். மனைவி பணியம்மாள். ஒரு பெண் குழந்தை



திரு லெக்ஷ்மண நாடார் (60)

S/o முத்துமாலை நாடார், சீர்காட்சி. குலசை லோன்துரை கொலை வழக்கில் 3 வருடம். திருச்செந்தூர், கொக்கிரகுளம், வேலூர், தஞ்சாவூர் ஜெயில்கள். மனைவி: உமையாள் 3 ஆண்களும், 3 பெண்களும் உள்ளனர். விவசாயம் பென்ஷன் பெறுகிறார்.



திரு த. சிவந்திக்கனி நாடார் (63)

S/o. தங்கவேல் நாடார், காலன்குடியிருப்பு, உடன்குடி. (வியாபாரம் சென்னை) குலசை லோன்துரை கொலை வழக்கில் 3 ஜென்மம். 3 வருட தண்டனை. திருச்செந்தூர், ஸ்ரீவை குண்டம், அலிப்புரம் ஜெயில். மனைவி: ஜானகி அம்மாள் 3 ஆண் மக்கள் இருக்கிறார்கள். நட



திரு ஆறுமுக நாடார் (லேட்)

S/o. வெள்ளக்கண் நாடார் செட்டியாபத்து குலசை லோன்துரை கொலைவழக்கில் 4 மாத தண்டனை. கொக்கிரகுளம் ஜெயில். பென்ஷன் பெறவில்லை. மனைவி: செல்லத்தாய் 2 ஆண்களும் 2 பெண்களும் உள்ளனர். நாடகங்கள் மூலமாக தேசிய ஒருமைப்பாட்டை விளக்கிய எழுத்தாளர்.



திரு. சா. ஈசாக்கு நாடார் (64)

S/o சாமுவேல் நாடார், மூக்குப்பீரி தந்திக் கம்பி வெட்டு கேஸ். தூத்துக்குடி, திருச்செந்தூர் சிறைகளில் 6½ மாதம். பென்ஷன் பெறவில்லை. மனைவி: ஞானமணி அம்மாள். 2 பெண்கள் இருக்கிறார்கள்

திரு. P. ரத்தின நாடார் (52)

S/o பார்வதி நாடார், வேண்டுவனத்திவிளை, பூச்சிக்காடு. பராஸ்ட், கள்ளுக்கடை தீ வைப்பு திருச்செந்தூர் சப்ஜெயிலில் 3மாதம் ரிமாண்ட். ரூ. 30 அபராதம். மனைவி: அமிர்தகனி ஏழு குழந்தைகள் இருக்கிறார்கள்.



திரு ஜோசப் பிளாவி பர்னாண்டோ (57)

S/o. சவேரியா பிச்சை பர்னாண்டோ, மணப்பாடு. மதுரையில் கள்ளுக்கடை, சுதேசி துணிக்கடை மறியல். செங்கல்பட்டு பாஸ்டர் பள்ளி 3 வருடம். பென்ஷன் பெறவில்லை. மனைவி: மேரி ஆரோக்கியம்மாள் 2 பெண்களும் 3 ஆண்களும் உள்ளனர்.

திரு. M. S. நடராஜன் (65)

S/o சுடலைமுத்து நாடார், கீழவீடு, ஆறுமுகநேரி. உப்பு சத்தியாகிரகம் திருச்செந்தூர், கொக்கிரகுளம், அலிப்புரம் சிறை 6 மாத தண்டனை இரு பென்ஷன்கள் பெறுகிறார். மனைவி: அருணாசல வடிவம்மாள் 3 பெண்களும் 3 ஆண்களும் உள்ளனர். விவசாயம.

திரு பி. பெரிய நாடார் (62)

S/o பிச்சைக்கண் நாடார், தளவாய்புரம் கள்ளுக்கடை மறியல்; திருச்செந்தூர் சப் ஜெயில் 43 நாட்கள் அபராதம் ரூ 50 பென்ஷன் பெறவில்லை. மனைவி: பால்கனி அம்மாள் 2 ஆண்களும் 2 பெண்களும் உள்ளனர். விவசாயம்.

R. S. தங்கவேல் (55)

S/o. சடையாண்டி நாடார், ஆறுமுகநேரி. வியாபாரம் சென்னை 1941 தனி நபர் சத்யாகிரகத்தில் சென்னை ஜெயிலில் 3 மாதம். 1942ல் எல்லா போராட்டங்களிலும் பங்கெடுத்து ஒரு வருடம் தலைமறைவாக இருந்தார் ஆறுமுகநேரி உப்பு சத்யாகிரகத்தில் கைதாகி அலிப்புரம் சிறையில் 6 மாத தண்டனை பென்ஷன் பெறவில்லை. மனைவி அழகுசுந்தரி 5 ஆண்களும் 3 பெண்களும் உள்ளனர்.



திரு D. ராமன் (66)

S/o தெய்வநாயகமய்யங்கார், ஆழ்வார் திருநகரி 1932ல் ஜில்லா சர்வாதிகாரி நிர் 15 அந்நிய துணிக்கடை மறியல் 'வெல்லிங்டன் பிரேத ஊர்வலம்'. திருச்சி மத்திய சிறையில் 18 மாத கடுங்காவல் தண்டனை. இரண்டு பென்ஷன்கள் பெறுகிறார் மனைவி: கிருஷ்ணம்மாள் ஒரு மகள். சொந்த ஊர் நாங்குநேரி. சிறை சென்றதற்காக வைதீகமான மடாதிபதிகளால் சமூக பகிஷ்காரம் செய்யப்பட்டு ஊரைவிட்டு வெளியேற்றப்பட்டதால் 1933 முதல் ஆழ்வார்திருநகரியில் குடியேறினார்.



திரு C. ஆறுமுகநயினார் நாடார் (72)

S/o. சிவசுப்பிரமணிய நாடார், வேண்டுவனத்துவிளை, பூச்சிக்காடு. கள்ளுக்கடை தீவைப்பு பாரஸ்டு கேஸ் திருச்செந்தூர் சப்ஜெயிலில 3 மாதம் ரிமாண்ட். பென்ஷன் பெறவில்லை. மனைவி: சண்முகக்கனி அம்மாள். 2 ஆண்களும் 3 பெண்களும் உள்ளனர். விவசாயம்.



திரு அ. ஆதித்த நாடார் (62)

S/o. அய்யம்பெருமாள் நாடார், நடுக்காலன் குடியிருப்பு. லோன் கொலை வழக்கில் திருச்செந்தூர் சிறையில் 15 நாள் ரிமாண்ட் மனைவி: செல்லத்தாயும், ஒரு மகனும் உள்ளனர். சுதந்திரம் கிடைக்கும் வரை பிள்ளைப் பேறு தேவையில்லை என்று இருந்தவர்.



திரு ஆ. மகராஜ மார்த்தாண்டம் (66)

S/o. ஆனந்தநாத நாடார், குட்டம் குலசை லோன் கொலை வழக்கு குரும்பூர் ரயில்வே ஸ்டேஷன் தீ வைப்பு வழக்கில் திருச்செந்தூர், கொக்கிரகுளம், ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி, ஜெயில்களில் 21 மாதம் ரிமாண்ட் பென்ஷன் பெறவில்லை. மனைவி: மங்கள ஆனந்த சரஸ்வதி மகனும் மகளும் இருக்கிறார்கள். காந்திய கிராமப் புனருத்தாரண பணி

திரு ரத்தினசாமி நாடார் (லேட்)

S/o. சண்முக நாடார், உடன்குடி. லோன் கொலை வழக்கில் திருச்செந்தூர், கொக்கிரகுளம் சிறையில் 6 மாதம் 8 நாள் தண்டனை மாநில பென்ஷன் வருகிறது மனைவி பூலோகம்அம்மாள், 2 ஆண்களும் 2 பெண்களும் உள்ளனர்.

திரு பொ. மகராஜ நாடார் (66)

S/o பொன்னையா நாடார்; மேலபபுதுக்குடி குரும்பூர் ரயில்வே ஸ்டேஷன் தீ வைப்பு வழக்கில் திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், தென்காசி, தூத்துக்குடி, கொக்கிரகுளம, ஜெயிலில் 19 மாதம் ரிமாண்ட். விவசாயம் பென்ஷன் பெறவில்லை

திரு. சுப்பையா பண்டாரம் (63)

S/o. சுடலைமுத்து பண்டாரம், குரங்கணி ஆகஸ்டு போராட்டம் கள்ளுக்கடை மறியல், சர்க்கார் சொத்து அழித்தல் தூத்துக்குடி சிறையில் 3 மாதம் பென்ஷன் பெறவில்லை ஒரு மகனும் இரண்டு மகளும் இருக்கிறார்கள் விவசாயம்

திரு. A. S பெஞ்சமின்

S/o சூசை எஸ்தேவுபர்னந்து அசோக்பவனம் அமலிநகர், திருச்செந்தூர். 1941ல் காந்திஜி அனுமதி பெற்று சத்தியாகிரகம் தூத்துக்குடி யில் கைதாகி 15 நாள் தண்டனை. மதுரையில் கைதாகி அலிபுரம் முகாம் சிறையில் 6 மாத தண்டனை மெஞ்ஞானபுரம் தபாலாபீஸ் தாக்குதல் வழக்கில் 20 மாதம் விசாரணைக் கைதி குலசேகரன்பட்டினம் லோன்துரை கொலை வழக்கில் 1942 செப்டம்பரில் கைதாகி 13 வருட கடுங்காவல் தண்டனை பெற்று அலிபுரம் முகாம் சிறையில் தண்டனை அனுபவிப்பு ஆகஸ்டு போராட்டத்தில் மூன்று ஜென்மம் 3 வருடம் மொத்தத்தில் ஆயுள் தண்டனை தூத்துக்குடி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், கொக்கிரகுளம் சப் ஜெயில் கள் மதுரை சென்ட்ரல் ஜெயில் அலிப்புரம் பெல்லாரி சானிட்டோரியம் ஆஸ்பத்திரி ஜெயில். மனைவி பெயர் திருமதி பெட்லா அம்மாள். ஆறு ஆண்களும் ஐந்து பெண் களும் இருக்கிறார்கள் மத்திய-மாநில சர்க்கார் பென்ஷன் பெறுகிறார்

திரு. மு. ராமசாமி நாடார் (54)

S/o. முத்துகருப்ப நாடார், செட்டியாபத்து குலசைலோன் கொலைவழக்கு திருச்செந்தூர் சிறையில் 17 நாள் ரிமாண்ட். மனைவி அங்கமணி அம்மாள் 3 ஆண்களும் உள்ளனர் விவசாயம்

திரு. ப. சிவசுப்பிரமணியஆதித்தன் (60)

S/o. பண்டாரநாடார், செட்டியாபத்து குலசை உப்பளம் சூறையாடல் திருச்செந் தூர் சப்ஜெயிலில் 29 நாட்கள் ரிமாண்ட் 4 ஆண் குழந்தைகள். விவசாயம்.



திரு. S. தங்கவேல் நாடார் (55)

S/o. சண்முகநாடார், நாதன்கிணறு ஆகஸ்டு போராட்டம். காட்டுமரங்களை வெட்டி சட்ட மறுப்பு இயக்கம் திருச்செந்தூர் சிறையில் 99 நாட்கள். அபராதம் ரூ 30. பென்ஷன் பெறவில்லை. மனைவி ஞானம்மாள் இரண்டு ஆண்கள் உள்ளனர். விவசாயம்.

திரு. க. அய்யாக்குட்டி நாடார் (52)

S/o. கந்தசாமிநாடார், தளவாய்புரம் கள்ளுக் கடை மறியல். திருச்செந்தூர் சப்ஜெயிலில் ஒரு மாதம் கடுங்காவலும் ரூ 50 அபராதமும், மனைவி லிங்கம்மாள் 6 ஆண்களும் 2 பெண் களும் உள்ளனர் விவசாயம்.



திரு. சு. தங்கப்பெருமாள் (50)

S/o. சுப்பையா நாடார். ஆறுமுகநேரி ஆறுமுகநேரி கீரனூர் உப்பு சத்தியாகிரகம் அலிப்புரம் சிறையில் 6 மாதம் மாநில பென்ஷன் பெறுகிறார். காலமான முதல் தார மனைவிக்கு 3 ஆண்கள் இருக்கிறார்கள் 2ம் தாரமனைவி ஞானரத்தினம்மாள்

திரு. வெ. தங்கவேல் நாடார் (59)

S/o வெள்ளையா நாடார், தளவாய்புரம் கள்ளுக் கடை மறியல் திருச்செந்தூர் சப்ஜெயிலில் 30 நாள் ரிமாண்ட். ரூ.50 அபராதம் மனைவி பேச்சியம்மாள் மகள் இருக்கிறாள் விவசாயம்



திரு: A. கனகசபாபதி பிள்ளை (லேட்)

S/o. அழகப்பபிள்ளை. திருச்செந்தூர் 1931 உப்பு சத்தியாகிரகம். 2 ஆண்களும் 3 பெண்களும் உள்ளனர்

திரு தூ நடேசநாடார் (66)

S/o. தூசிமுத்து நாடார், ஆறுமுகநேரி உப்பு சத்தியாகிரகம் திருச்செந்தூர் கொக்கிரகுளம், அலிப்புரம் ஜெயில்களில் மொத்தம் 6 மாதம் 20 நாட்கள் மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி சொர்ணம்மாள் 4 ஆண்களும் 1 பெண்ணும் உள்ளனர்



திரு. T. ஆண்டியப்பன் (53)

S/o தங்கையா நாடார், ஆறுமுகநேரி பெரம்பூர் சென்னை.. உப்பு சத்தியாகிரகம் அலிப்புரம் ஜெயிலில் 6 மாதம் தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் திருச்செந்தூர் சப்ஜெயில் 9 மாதம். பென்ஷன் பெறவில்லை. மனைவி செவந்திக்கனி. 3 பெண்களும் 5 ஆண்களும் உள்ளனர். 1930முதல் காங்கிரஸ் பணி. 1955 முதல் 68 வரை சென்னை கார்ப்பரேஷன் மெம்பராக பணியாற்றினார். புரசை தொகுதி ஸ்தாபன காங்கிரஸ் தலைவராகப் பணியற்றி வருகிறார்



திரு. R .S. ராஜபாண்டியன் (50)

S/o. சடையாண்டி நாடார் ஆறுமுகநேரி சென்னை ஆ௳ஸ்டுபோர்ராட்டம் உப்பு சத்தியாகிரகம் அலிப்புரம் கேம்ப் ஜெயிலில் 6 மாதம். பென்ஷன் பெறுகிறார். மனைவி தனலட்சுமி 3 ஆண்களும் 1 பெண்ணும் இருக்கிறார்கள் வியாபாரம்.



திரு. S. திக்கிலான்குட்டி நாடார்

S/o. சண்முகநாடார் ஆறுமுகநேரி உப்பு சத்தியாகிரகம் திருச்செந்தூர், கொக்கிரகுளம் அலிப்புரம் ஜெயிலில் 6 மாதம் தண்டனை மாநில பென்ஷன் பெறுகிறார்.

P. நாராயண பிள்ளை

என்ற P.S. நாராயணன்.

S/o. உல. பரமசிவம் பிள்ளை, கீழ புதுத்தெரு, திருச்செந்தூர். 1942 குலசை லோன்துரை கொலை வழக்கில் ஆறாவது எதிரி (6) யாகச் சேர்க்கப்பட்டு, ஐந்து வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, தண்டனை காலம் பூராவையும் அலிப்புரம் முகாம் சிறையில் அனுபவித்து 1946 மார்ச்சு மாதம் விடுதலையானார். 1950ல் தியாகி A. S பெஞ்சமின் சகோதரி புஷ்பம் அம்மாளை கலப்பு மணம் செய்து கொண்டார். மாநில-மத்திய பென்ஷன் பெறுகிறார். மனைவியும், 5 ஆண்களும், 2 பெண்களும் உள்ளனர்.



திரு. ஈ. ஞானக்கண் நாடார் (67)

S/o ஈசாக்கு நாடார், மூக்குப்பீரி 1942 போராட்டம் தூத்துக்குடி, திருச்செந்தூர் சாத்தான்குளம் ஜெயில்களில் 7 மாதம் 20 நாட்கள். பென்ஷன் பெறவில்லை. மனைவி: ராஜம்மாள், ஒரு மகள். விவசாயம்.

திரு. ஆ மகாராஜ நாடார் (50)

S/o ஆபிரகாம் நாடார், இடையன் விளை ஆகஸ்டு போராட்டத்தில் தந்தி கம்பி வெட்டியது. ஸ்ரீவைகுண்டம், கொக்கிரகுளம் சப் ஜெயில்களில் 3 மாதம் ரிமாண்ட். பென்ஷன் இல்லை. மனைவி: புஷ்பம்மாள். 4 ஆண்களும், 4 பெண்களும் உள்ளனர். விவசாயம்.

திருச்செந்தூர் தாலூகா
சுதந்திர போராட்ட வீரர்கள் சங்கம்



திரு சு. தங்கவேல் நாடார்
தலைவர், ஆறுமுகநேரி.

திரு G. மகாராஜன்
செயலாளர், நாசரேத்.



சுதந்திரர் K. சுப்பையர்
உபதலைவர், திருச்செந்தூர்.

திரு D. ராமன்
உதவி செயலாளர், ஆழ்வார்திருநகரி.

கமிட்டி மெம்பர்கள் :

திருவாளர்கள் :

A. T. காசி, நா. ஆறுமுகப்பாண்டியன், சு. நாராயண நாடார், முத்துசாமி நாயுடு, G. நாராயணன், D. தர்மம் கோயில் பிள்ளை, S. பூவலிங்கம், A. S. பெஞ்சமின், ல. மூக்க நாடார், து. நடேச நாடார், எம். லெக்ஷ்மணன்

திருச்செந்தூர் தாலுகா
சுதந்திரப் போராட்ட வீரர்கள்

நினைவு ஸ்தூபி அமைப்புக் கமிட்டி

திரு. P. T. தாணுப்பிள்ளை
தலைவர்



திரு Y. S. நியூட்டன்
பொருளாளர்

திரு. S. S. P. ரெங்கசாமி நாடார், உதவி தலைவர்



திரு. கா. கேசவன்
செயலாளர்



திரு. நா. மு. மகாதேவன்
செயலாளர்



திரு A. ராஜையா
தியாகிகள் நினைவு
ஸ்தூபி அமைத்த சிற்பி



திரு. பால் நாடார்
மன்னான் நகர்



நாட்டின் விடுதலைக்காக சர்வபரித் தியாகம் செய்த சுதந்திர போராட்ட வீரர்களுக்கு எனது அஞ்சலியையும், நாட்டின் புனருத்தாரணப் பணியில் ஈடுபட்டிருக்கும் தியாகிகளுக்கும், தலைவர்களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

K. T. சோமசுந்தரம்
கார்ப்பரேஷன் மெம்பர், சென்னை.

திரு. வே. த. சின்னத்துரை (52)

S/o. தங்கையா நாடார், வடக்குத் தெரு, ஆறுமுகநேரி, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை. உப்பு சத்தியாகிரகம். திருச்செந்தூர், கொக்கிரகுளம், அலிப்புரம் ஜெயில்களில் 6 மாதம். மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி: கனி அம்மாள். 3 ஆண்களும் ஒரு பெண்ணும் உள்ளனர். வியாபாரம்.

திரு. வே. அருணகிரி நாடார் (லேட்)

S/o. வேல்கண் நாடார், புன்னை சாத்தான் குறிச்சி. ஆறுமுகநேரி கீரனூர் உப்பு சத்தியாகிரகம். திருச்செந்தூர் அலிப்புரம் சிறைகளில் 6 மாத தண்டனை பென்ஷன் பெறவில்லை. 2 ஆண்கள் மட்டும். விவசாயம்.

திரு. த. ராம நாடார்

S/o. தங்கவேல் நாடார், கீழ நவலடிவிளை, ஆறுமுகநேரி. ஆறுமுகநேரி கீரனூர் உப்பு சத்தியாகிரகம். திருச்செந்தூர், அலிப்புரம் ஜெயில்களில் 6 மாதம் பென்ஷன் பெறவில்லை. மனைவி : பால்கனி அம்மாள். 2 ஆண்களும் 2 பெண்களும் இருக்கிறார்கள்.

திரு. ஞா. சண்முகவேல் (61)

S/o. ஞானப்பிரகாச நாடார், குரிப்பன்குளம் தனி நபர் சத்தியாகிரகம். சென்ட்ரல் ஜெயிலில் 4 மாதம். மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி : பரிபூரணம்மாள். ஒரு மகன்.

திரு S. லெட்சுமணன் (லேட்)

S/o. சுப்பு நாடார், தண்டுபத்து. குலசை லோன்துரை கொலை வழக்கு, உப்பு சத்தியாகிரகம் திருச்செந்தூர், திருநெல்வேலி ஜெயில்களில் ஒரு வருடம் பென்ஷன் பெறவில்லை. மனைவி தங்கம்மாள் 4 ஆண் 2 பெண்

திரு கருத்தபார்வதி நாடார் (லேட்)

S/o. பிரமுத்து நாடார், நாதன் கிணறு கள்ளுக்கடை மறியல், தீவைப்பு ஸ்ரீவை குண்டம், கொக்கிரகுளம் திருச்செந்தூர் சிறைகளில் 6 மாதம் 15 நாட்கள். பென்ஷன் பெறவில்லை. மனைவி பெயர் தவமணி அம்மாள்.

திரு. ஆ. வேதமாணிக்க நாடார் (லேட்)

S/o. ஆபிகராம் நாடார், மூக்குப்பீரி 1942 போராட்டம் தூத்துக்குடி, திருச்செந்தூர், சாத்தான்குளம் ஜெயில்களில் 7 மாதம் 23 நாட்கள் பென்ஷன் பெறவில்லை. மனைவி பெயர் ஞானமணி அம்மாள்

திரு. M. பாக்கியநாதன் (68)

S/o பால்மாயாண்டி நாடார், மூக்குப்பீரி 1942ல் தந்திகம்பி வெட்டு தூத்துக்குடி, சாத்தான்குளம், திருச்செந்தூர் ஜெயில்களில் ரிமாண்டில் 7 மாதம் பென்ஷன் பெறவில்லை விவசாயம்.

திரு. ஜி. இ. முத்து (50)

S/o. குருசாமி. குலசேகரன்பட்டினம் 1941 தனி நபர் சத்தியாகிரகம் 1942 ஆகஸ்டு போராட்டம். திருச்செந்தூர், கொக்கிரகுளம் சப் ஜெயில்கள், வேலூர், தஞ்சாவூர் மத்திய சிறைகளில் பாதுகாப்புகைதியாக 3 வருடம் பென்ஷன் பெறவில்லை. மனைவி சண்முகக் கனி, ஒரே பெண் செங்கற்பட்டு ஜில்லா லத்தூரில் B. D. O. ஆக இருக்கிறார்.

திரு. [illegible] நாடார் (லேட்)

[illegible] லகமுத்து நாடார், [illegible] 1942 போராட்டம் [illegible] கள்ளுக்கடை மறியல் தீவைப்பு திருச்செந்தூர், கொக்கிரகுளம் அலிப்புரம் [illegible]களில் 3 வருடம் [illegible] ரூ. 100 மா[illegible] பென்ஷன் பெறு[illegible] மனைவி : சித்திரைக்கனி அம்மாள் ஒரு மக[illegible]

திரு ர[illegible] (லே[illegible])

S/o தங்கையா நாடார் திருச்செந்[illegible] தனி நபர் சத்தியாகிரகம் திரு[illegible] மதுரை சிறையில் 6 மாதம். [illegible] மனைவி பெயர் சர[illegible]

திரு [illegible]ராயண [illegible] (லே[illegible])

S/o சு[illegible] நாடார் [illegible] 1942 போரா[illegible] கள்ளுக்கடை [illegible] தீவைப்பு [illegible] வெட்டு திருச்செ[illegible] [illegible]குளம் அலிப்புரம் சிறையில் [illegible] [illegible] (13) மனைவி [illegible] அம்மாள் ஒரு மகன் மாநில பென்[illegible] [illegible]பெறுகிறார்.

திரு. A. ரத்தினசாமி நாடார் (50)

S/o ஆறுமுகநயினார் நாடார், செவல்விளை புதூர் குரும்பூர் ரயில் நிலையம் தீ வைப்பு தந்தி கம்பி வெட்டு, குலசை லோன் கொலை வழக்குகளில் திருச்செந்தூர், கொக்கிரகுளம், பல்லாரி, அலிபுரம் சிறைகளில் 2 வருடம். பென்ஷன் பெறவில்லை. மனைவி: ரெபேக்காள். 3 பெண்களும், 3 ஆண்களும் உள்ளனர். நகர் கிராமத் தொழில் அலுவலகத்தில் பணியாற்றுகிறார்.



திரு G. நாராயணன் (49)

S/o கணபதி நாடார், சீர்காட்சி. ஆகஸ்டு போராட்டத்தில் கலந்து அலிப்புரம் முகாம் ஜெயிலில் 9 மாத சிறைத்தண்டனை. லோன் துரை கொலை வழக்கில் 15 வது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டு பின்னர் விடுதலை. திருச்செந்தூர், கொக்கிரகுளம் சப்ஜெயில்களில் 6 மாதம் ரிமாண்ட் கைதியாக இருந்திருக்கிறார். மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவிகள்: சண்முகக்கனி, செங்கமலம்மாள். 3 பெண்களும் 3 ஆண்களும் இருக்கின்றனர்.

திரு க. பொன்னையா நாடார் (57)

S/o கட்டேரி நாடார், சந்தையடியூர் குலசை லோன் கொலை வழக்கு கள்ளுக் கடை தீவைப்பு வழக்கு திருச்செந்தூர், கொக்கிரகுளம் சப் ஜெயில்களில் 6 மாதம் 8 நாள் தண்டனை. மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி: செல்வக்கனி அம்மாள். 3 ஆண்களும் ஒரு பெண்ணும் உள்ளனர்.

திரு எஸ். வலேறியான் பெர்ணண்டோ (63)

S/o. சவியர் அந்தோணி பர்னண்டோ, பழையகாயல் 1930 ல் கள்ளுக்கடை மறியலில் கைதாகி திருச்சி ஜெயிலில் 5 மாதம். பின்னர் 1941ல் தனி நபர் சத்தியாக்கிரகம் பற்றி பேசியதற்காக அலிப்புரம் ஜெயிலில் 6 மாதம். மாநில பென்ஷன் வருகிறது. மனைவி: மகத்துவம் மச்சாது. இரு பெண்கள் உள்ளனர்.

நாதன்கிணறு



திரு. ல. மூக்க நாடார் (59)

S/o லட்சுமண நாடார். ஆறுமுகநேரி உப்பு சத்தியாகிரகம். திருச்செந்தூர், கொக்கிரகுளம் அலிப்புரம் ஜெயில்களில் 6 மாதம். மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி காசித்தங்கம்மாள். 2 பெண்களும் ஒரு ஆணும் உள்ளனர். விவசாயம்.

திரு. மாவுலி ராஜா (58)

S/o. பொன்னையா நாடார், ஆறுமுகநேரி உப்பு சத்தியாகிரகம் திருச்செந்தூர், கொக்கிரகுளம், அலிப்புரம் ஜெயில்களில் 6 மாதம. மாநில பென்ஷன் பெறுகிறார் மனைவி அன்னபூரணம்மாள், 2 ஆண்களும் 2 பெண்களும் உள்ளனர். விவசாயம்.



திரு ஆறுமுகபாண்டியன் (46)

S/o. நாராயண நாடார். நாதன்கிணறு ஆகஸ்டு போராட்டம் கள்ளுக்கடை மறியல் தீவைப்பு. திருச்செந்தூர், தூத்துக்குடி கொக்கிரகுளம் ஜெயில்களில் 7மாதம் 4 நாள் சிறைவாசம். 12 சவுக்கடி. தந்தையுடனும் தமையனுடனும், எட்டாவது வகுப்பு படிக்கும் 15 வயது பள்ளிமாணவனாக இருந்தபோதே சிறைசென்றவர். மனைவி விஜயா அம்மாள் 2 ஆண் 3 பெண் உள்ளனர்.

திரு. கோ. மகாராஜன் 52

S/o. கோபால் நாடார், கடையனோடை ஆகஸ்டு போராட்டம் கோவை அடிஷனல் முதலாவது மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தேசிய கொடியுடன் சென்று மாஜிஸ்திரேட்டை ராஜினாமா செய்யக் கோரியதால் 10 மாத தண்டனை. கோவை சப் கலெக்டர் ஆபீசில் தேசிய கொடியுடன் சென்று கலெக்டரை ராஜினாமாசெய்து போராட்டத்திற்கு அழைத்த தில் 18 மாத கடுங்காவல். அலிப்புரம ஜெயில் (பெல்லாரி, மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி செல்வம் 2பெண்களும் 5 ஆண்களும் இருக்கிறார்கள். திருச்செந்தூர் தாலுகா சுதந்திரப் போர் வீரர்கள் சங்க செயலாளர்

திரு த. பெரியசாமி (53)

S/o. தங்கவேல நாடார், திருச்செந்தூர். தனி நபர் சத்தியாகிரகம் திருச்செந்தூர் சப்ஜெயிலில் 22 நாள் ரிமாண்ட். மனைவி அன்னத்தாய். 2 ஆண்களும் ஒரு பெண்ணும் உள்ளனர்.



திரு. சாமிநாடார் (53)

S/o. பண்டார நாடார் பூச்சிக்காடு.

கள்ளுக்கடை தீவைப்பு, ஆகஸ்டு போராட்டம், பாஸ்டு கேஸ் திருச்செந்தூர். தூத்துக்குடி கொக்கிரகுளம் அலிபுரம் சிறைகளில் 30 மாதம். அபராதம் ரூ 130 மத்திய-மாநில பென்ஷன் பெறுகிறார். மனைவி சித்திரைக்கனி அம்மாள். 4 பெண்களும் ஒரு மகனும் இருக்கிறார்கள் விவசாயம்



திரு. ரா. பச்சைப்பெருமாள் (60)

S.o. ராமசாமி நாடார், வாழவல்லான். தனி நபர் சத்தியாகிரகம். குரும்பூர் ரயில்நிலையம் தீ வைத்தல். தூத்துக்குடி, திருச்செந்தூர் கொக்கிரகுளம், தென்காசி சிறைகளில் ரிமாண்டு கைதியாக 23 மாதங்கள். மனைவி சொர்ணத்தம்மாள். 2 பெண்கள் இருக்கிறார்கள். விவசாயம்.

திரு. தர்மலிங்க நாடார் என்ற மகாலிங்க நாடார் (61

S/o சண்முக நாடார், நாதன்கிணறு ஆகஸ்டு போராட்டம் சர்க்கார் மரங்களை வெட்டி சட்டமறுப்பு இயக்கம் திருச்செந்தூர் சிறையில் 99 நாட்கள் அபராதம் ரூ. 30 பென்ஷன் பெறவில்லை. மனைவி பால்கனி அம்மாள் விவசாயம்

திரு. K. சுதந்திரர் சுப்பையர் (54)

S/o. கணபதி ஐயர், திருச்செந்தூர் ஆகஸ்டு போராட்டம், தந்திகம்பி அறுத்தல், ஒரு வருட கடுங்காவல், 36 கசையடி. மருத்வாலா அறிக்கை ஒரு வருட கடுங்காவல் அலிப்புரம் ஜெயில் இரண்டு தடவை அலிப்புரம் கேம்ப் ஜெயில் இரு பென்ஷன்கள் பெறுகிறார். மனைவி காவேரி அம்மாள் 3 ஆண்கள் இருக்கிறார்கள் 1932 முதல் தேச சேவையில் ஈடுபட்டுள்ளார். திருச்செந்தூர் பஞ்சாயத்து போர்டு தலைவராக இருக்கிறார்.



திரு. சு. நாராயண நாடார் (68)

S/o. சுடலைமுத்து நாடார், பூச்சிக்காடு ஆகஸ்டு போராட்டம் கள்ளுக்கடை தீவைப்பு பாரஸ்டுகேஸ் திருச்செந்தூர், தூத்துக்குடி. கொக்கிரகுளம், அலிப்புரம் ஜெயில்களில் 30 மாதம். மாநில பென்ஷன் பெறுகிறார் மனைவி ராஜமணி அம்மாள், மகள் இருக்கிறார்



திரு. அப்பு நாடார் என்ற ராமசாமி நாடார் (லேட்) S/o வாலசுப்பிரமணிய நாடார், மேலப்புதுக்குடி குறும்பூர் ரயில் நிலையம் தீயிடல் ஒத்துழையாமை இயக்கம் திருச்செந்தூர், கொக்கிரகுளம், தென்காசி சிறைகளில் 21 மாதம். மனைவி பேச்சி அம்மாள் ஒருமகன் இருக்கிறார்.



திரு. S. பூவலிங்கம் (51)

S/o. சுயம்புலிங்க நாடார், நடுக்காலன் குடியிருப்பு, உடன்குடி லோன்துரை கொலை வழக்கில் அலிப்புரம் கேம்ப் ஜெயிலில் 2 வருடம். மனைவி பால்தங்கம் அம்மாள் மாநில பென்ஷன் பெறுகிறார்.

நன்றி அறிவிப்பு

சுதந்திரத்திற்காகப் போராடிய திருச்செந்தூர் தாலூகாவிலுள்ள வீரர்களின் நினைவாக திருச்செந்தூரில் ஸ்தூபி ஒன்றை நிர்மாணித்து எங்களை எல்லாம் கௌரவித்த திருச்செந்தூர் தாலூகா சுதந்திரபோராட்ட வீரர்கள் நினைவு ஸ்தூபி அமைப்புக்கமிட்டிக்கும், தியாகிகள் நினைவு மலர் தயாரிப்பில் உறுதுணையாக இருந்த 'புதுசகாப்தம்' ஆசிரியர் திரு. நெல்லை கணபதிக்கும், திருச்செந்தூர் பஞ்சாயத்து தலைவர் தியாகி திரு. சுதந்திரர் K. சுப்பையர், உபதலைவர் திரு. T. ராஜரெத்தினம் பர்ஞுந்து உறுப்பினர்கள் P. ஆறுமுகம் பிள்ளை, G. R. பாலகிருஷ்ணன், T. பெரியசாமி, K. மந்திரம் S. தெய்வநாயகம் பிள்ளை, N. சுப்பிரமணிய அய்யர், K. ஆறுமுக நயினர் M. மகாதேவ அய்யர், A. செங்கண்ணன், N. ஆறுமுகக்கோனர், S. ராஜரத்தினம் நாடார், P. கோபால கிருஷ்ணன், A. ஜோசப் அகஸ்டீன், T. குரூஸ்டீரோஸ், திருமதி. கோவைச்சந்திரா, திரு. A. மந்திரம் நிர்வாக அதிகாரி ஆகியோருக்கும் எங்களின் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

— திருச்செந்தூர் தாலூகா சுதந்திர போராட்ட வீரர்கள் சங்கம், ஆறுமுகநேரி

வானத்திலே வட்டமிட்டுக் கொண்டிருக்கும் லட்சோப லட்சம் தியாகிகளின் ஆவி மீது ஆணையிட்டுச் சொல்லுவோம் நீங்கள் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செய்வோம்— நீங்கள் கனவு கண்ட—துன்ப துயரங்களற்ற புதிய சமுதாயத்தை உருவாக்கியே தீருவோம். புதிய நவ பாரதத்தை— தமிழகத்தை சமதர்மப் பூங்காவாக மாற்றும் வரை எங்களுக்கு ஓய்வில்லை, ஒழிவில்லை. உங்களின் வீரம் எங்களுக்கு வழி காட்டட்டும். உங்களின் தியாகம் எங்களுக்கு புத்துயிர் அளிக்கட்டும். அதன்மூலம் புது யுகம் பிறக்கட்டும்.

N. துரைப்பாண்டியன்,
தலைவர், ஜில்லா காங்கிரஸ் கமிட்டி, திருநெல்வேலி



காணக் கிடைக்குமா?



தூக்குமேடைக் கொட்டடியில் திரு. T. V. காசிராஜன், திரு. P. ராஜகோபாலன்
இயற்றிய பாடல்

(காட்சி, கண்காட்சியே என்ற மெட்டு)

பல்லவி

காணக்கிடைக்குமா? கண்ணாலின் னொருதரம் — காணக்கிடைக்குமா
மாண்புயர்ந்த மாபெரும் மாந்தரை ஈன்ற யெந்தன் பாரத நாட்டினை
— காணக்கிடைக்குமா

அநுபல்லவி

காணுமிடந்தோறும் நிறை ஆனந்தப் பரிபூரணத் தெய்வமே
— காணக்கிடைக்குமா!
நாடுறும் துயர் நீங்கி வாழ்ந்திடவே யுழைத்திடும் யென்திருநேயரைக்
— காணக்

சரணம் — 1

அன்னை திரு நாட்டினிற்கு வந்த துன்பம் நீங்கவே
என்னுடன் பலர் சிறையில் இருந்து சொல்லொண்ணாத
இன்னல் லடைந்தின்னும் சிறைதன்னிலே வசித்திடும்
என்னுயிரனைய செல்லத்துரையை
எந்தன் இனிய சுகுணாளும் மந்திரத்தை
மிக்க இளகு முள்ளச் சிவந்திக்கனியை
நல்ல இசைந்த தொண்டன் கோவில்பிள்ளையை
பேச்சு மாரி பொழி தோழன் பெஞ்சமினை நாராயணனை
மற்றோரனைவரையும் — காணக்கிடைக்குமா!

சரணம் — 2

தந்தை யன்பு தந்த சிறுதந்தை தங்கவேலனை
எந்தன்னுவி போன்ற கோசல்ராமனென்னும் சிறுகத்தை
சிந்தனையகலாத பொன்னம்பல வீரத்தங்கத்தை
சிந்தனை சிறந்த தூய தியாகி நடராஜனை
சுந்தரன் யென் அன்பன் ஜி. இ. முத்துவை
காசியென்ற அந்தப் பையனை லக்ஷ்மணனை
உள்ளம் சந்ததமும் எண்ணி யெண்ணி தெய்வமே!
இனி யென்றவரைக் காண்பதென்று ஏங்குதே
தூக்கு மேடையிலும் தாய்நாட்டை நினைந்து
பாடும் காசி-கோபாலுக்கு — காணக்கிடைக்குமா!

இருவரும் விடுதலைபெற்ற பின் திருநெல்வேலியில் கூட்டத்தில் இப்பாட்டை ஜென்ம தண்டனை பெற்று விடுதலையான திரு. தர்மம் கோயில்பிள்ளை உணர்ச்சியுடன் பாடினார். பொதுமககள பல்லாயிரம் பேர் கண்களில் நீர் ததும்பியது. இப்பாடலை அச்சிட்டு விநியோகிக்கும்படி கூட்டத்தினர் கேட்டுக்கொண்டனர். அக்கூட்டத்திலிருந்த ஏரல், சிட்பண்ட் திரு. முத்துமாலை நாடார் இப்பாட்டை ரூ. 501 க்கு ஏலத்தில் எடுத்தார், அத்தொகையைக்கொண்டு இப்பாட்டு அச்சிட்டு பின்னர் வழங்கப்பட்டது.

தந்தி "வாலேகுரு" போன்: 320

அன்புடன் வாழ்த்துகிறோம்!

S. சந்தோஷ நாடார் & சன்



எவர்சில்வர் பாத்திர வியாபாரம்

ஹைரோடு

திருநெல்வேலி ஜங்ஷன்

H. O. சென்னை



தியாகிகளின் ஒளிவிளக்கு

K. T. K. மோகன்ராம்

'இம்' என்றால் சிறைவாசம்' 'ஏன்' என்றால் வனவாசம் என கொடுமையே அறமாகித் திகழ்ந்த நாளில் ஊமையராய்—செவிடர்களாய் —குருடர்களாய் அடிமைத் தளைகளால் கட்டுண்டு நாம் யார்? நமது நாடு எது? நமது நிலை என்ன? என்பதை அறியாமல், அறியாமை இருளில் அழுந்திக் கிடந்த பாரத மக்களைத் தட்டி எழுப்பி, நாம் இருக்கும் நாடு நமது என்பதை அறிந்தோம், அது நமக்கே உரிமையாம் என்பதையும் உணர்ந்தோம் என சுதந்திர தீபத்தைக் கையில் ஏந்தி வீரப் பண் பாடி வெற்றி உலா வந்த எண்ணற்ற தியாகிகளின் உழைப்பில் உருவான இப் புண்ய பூமியில் வாழும் பேறினைப் பெற்றதற்காக நாமெல்லாம் பெருமை கொள்ளலாம், பூரிப்படையலாம்.

எடுத்த காரியத்தை முடிக்கும்வரை ஊண் உறக்கம் இன்றி, சொந்த பந்தம் பாராமல் எத்துணை துன்பங்கள் இடர் பட்டாலும் தொட்ட பணியை இடையில் விடாமல்—சோர்வுறாது இலட்சியப் பயணத்தை தொடர்ந்து நடத்தி வெற்றி கண்ட தியாகச் செம்மல்களின் வீர வரலாறு, நமக்கு மட்டுமல்ல நமது எதிர்கால சந்ததியினருக்கும் ஒளிவிளக்காக நின்று நிலைத்து என்றென்றும் நல்வழிகாட்டும்.

எண்ணில் அடங்காத் தியாகிகளின் உழைப்பால் வாராது வந்த மாமணியாம் சுதந்திரத்துக்கு எந்தவித விபத்தும் ஏற்படாமல் கட்டிக் காப்பது நம்மவர் அனைவரதும் தலையாயக் கடமை. எந்த விலை கொடுத்தேனும் வந்த சுதந்திரத்துக்கு ஆபத்து வருங்கால்-உயிர் எமக்கு பெரிதல்ல என்ற உறுதிப்பாடுடன் முனைந்து நிற்கும் ஆற்றல் நம்மவர் அனைவருக்கும் ஏற்படல் வேண்டும் அப்போதுதான் பலன் கருதாது பாடு பட்ட எண்ணில் அடங்கா சுதந்திர வீரப் போராட்ட வீரர்களை நாம் மதிக்கின்றோம் என்று அர்த்தம். இல்லையேல் எத்தனையோ இனம் தெரியாத பெரு வீரர்கள் சிந்திய வியர்வை கொட்டிய இரத்தம்—பட்ட கஷ்டம் அனைத்தும் வீண் என எதிர்கால சரித்திரம் நம்மை எள்ளி நகையாடும்.

அந்த இழிச்சொல்லுக்கு நாமும் நமது நாடும் ஆளாகாமல் அந்தப் பெருந்தியாகிகளின் உழைப்புக்கு மதிப்பு கொடுத்து, பட்ட பாட்டிற்காக நாம் தலை வணங்குவதுடன் அவர்கள் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து இந்த நாட்டை ஒரு நன்னாடாக—எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான பொன்னாடாக பூத்துக் குலுங்கும் புது மலர்ச் சோலையாக செய்வோம். இதுவே தியாகச் செம்மல்களுக்கு நாம் செலுத்தும் கைமாறு.

உழைப்பால் உயர்ந்த உத்தமர்களின் நாமம் வாழ்க! சுதந்திரப் போராட்ட வீரர்களின் புகழ் ஓங்குக!

திருச்செந்தூர் தாலுகா தியாகிகள்
நினைவு ஸ்தூபி திறப்பு விழாக் காட்சிகள்



பாரத பாதுகாப்பு அமைச்சர்
திரு. ஜகஜீவன்ராம்
திரு. கோசல்ராமன்
ஹெலிகாப்டரில் இருந்து இறங்கி
தாரங்கதாரா கெமிக்கல்ஸ் மைதானத்தில்
வந்து கொண்டிருக்கிறார்.



திரு. ஜெகஜீவன்ராம்
அவர்களை வரவேற்று அழைத்து
வரும் காட்சி.

திருச்செந்தூர் தாலுகா தியாகிகள்
சங்கத் தலைவர்
தியாகி திரு. த. தங்கவேல்
பாதுகாப்பு அமைச்சர்
திரு. ஜகஜீவன்ராமை
வரவேற்றுப் பேசி மாலை அணிவிக்கிறார்

திருச்செந்தூர் பஞ்சாயத்து தலைவர்
திரு. சுதந்திரா
தியாகி K. சுப்பைய்யரும்
நிர்வாக அதிகாரி
திரு. A. மந்திரமும்
அமைச்சரை வரவேற்று மாலை
அணிவிக்கிறார்கள்

திரு. ஜகஜீவன்ராம் அவர்களை
திருநெல்வேலி ஜில்லா தியாகிகள்
சங்கத் தலைவர்
திரு. M. C. வீரபாகு
விழா கமிட்டிப் பொருளாளர்
திரு. Y. S. நியூட்டன்
மற்றும் பலர் வரவேற்கிறார்கள்

கூட்டத்தலைவர் திரு. M. C. வீரபா
தலைமை உரை ஆற்றுகிறார். அவரு
இடதுபுறம் நினைவு ஸ்தூபி கமிட்டி தலை
திரு. பி. டி. தாணுப் பிள்ளை.
தொப்பியுடன் நின்று கொண்டிருப்பு
ஸ்தூபிக்கமிட்டி செயலாளர்களில்
ஒருவரான **திரு. நா. மு. மகாதேவ**
முன்னால் உட்கார்ந்திருக்கும் தியாகி
இடமிருந்து வலம்
திரு. ஏ. எஸ். பெஞ்சமின்
திரு. முத்துசாமி நாயுடு
திரு. ரெவரண்ட் பால் ராமசாமி

திருச்செந்தூர் தாலுகா தியாகிகளின்
நினைவு ஸ்தூபிக்கு அடுத்திருக்கும் சுமார்
ரூ 20,000க்குமேல் மதிப்புள்ள கட்டி
டத்தை தியாகிகளின் ஞாபகார்த்தமாக
தேசிய வாசகசாலையாக வைத்து நடத்த
திரு. கந்தசாமி செட்டியார்
குடும்பத்தினர் வழங்கிய நன்கொடை
பத்திரத்தை **திரு. ஜகஜீவன்ராம்**
பெற்றுக்கொள்ளும் காட்சி

திருச்செந்தூர் பஞ்சாயத்து
உபதலைவர் திரு. T. ராஜரத்தின
பர்னாந்து
பஞ்சாயத்து சார்பில் வரவேற்பித
வாசிக்கிறார்.

திரு. ஜெகஜீவன்ராமுடன்
(இடம்) நன்கொடை வழங்கிய
திரு. கந்தசாமி செட்டியார்
குடும்பத்தினர்



திருச்செந்தூர் தாலுகா தியாகிகளின்
நினைவு ஸ்தூபியை
திரு. ஜகஜீவன்ராம்
திறந்து வைக்கிறுர்

திரு ஜகஜீவன்ராம்
சிறப்புரையாற்றுகிறுர்



நினைவு ஸ்தூபி அருகில் திருச்செந்தூர்
தாலுகா தியாகிகள் சிலர்.



நினைவு ஸ்தூபி திறப்பு விழாவில்
கலந்து கொண்ட பெரும்
கூட்டத்தின் ஒரு பகுதி

தியாகி திரு. தோசல்ராம்
சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்

தேசீய வாசகசாலையை
திரு. ஜகஜீவன்ராம்
திறந்து வைக்கிறார்.

திருச்செந்தூர் தாலுகா தியாகிகள்
நினைவு மலரை
திரு. ஜகஜீவன்ராமிடமிருந்து தியாகி
ரெவரண்ட்பால் ராமசாமி, முத்து
நாயுடு, காசராஜன், ஏ. எஸ். பெஞ்ச
ஆகியோர் பெற்றுக் கொள்ளுகிறார்கள்



தியாகி
திருச்செந்தூர்

திரு. எஸ். வி. மகாலிங்கம் (லேட்)

S/o. வேலாயுத நாடார், ஆறுமுகநேரி உப்பு சத்தியாக்கிரகம். 6 மாதம் அலிபுரம் ஜெயிலில். 2 மாதம் திருச்செந்தூர், கொக்கிரகுளம் சப் ஜெயிலில், மனைவி [illegible], ஒரு ஆணும், இரண்டு பெண்களும் இருக்கிறார்கள்.

S. A. தாயம்மாள்

ஆறுமுகநேரி, 1941-ல் தனிப்பட்ட சத்தியாகிரகத்தில் ஆழ்வார்திருநகரில் போலீசாரால் கைது செய்யப்பட்டு 1942-ல் ஸ்ரீவைகுண்டம் சப்ஜெயிலிலும் தூத்துக்குடி சப்ஜெயிலிலும் ரிமாண்டிலிருந்தார். தற்பொழுது அரசினர் காதி இலாக்காவில் பரப்பாடியில் வேலை பார்க்கிறார்.



ஆறுமுகநேரியில்
திரு. ஜகஜீவன்ராம்
திறந்து வைத்த உப்பு சத்தியாக்கிரக
நினைவுச் சின்னம்

சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்ட தியாகிகளின் பட்டியல்

திரு. மா. அழகுவேல் நாடார்.
பேயன்விளை, உப்புசத்தியாக்கிரகம்
ஆறு மாத தண்டனை

,, A. V. ராமகிருஷ்ணன்
தென் திருப்பேரை, 1933-ல் சென்னை, பெல்லாரி சிறைகளில் 3 மாதம். மாநில பென்ஷன் பெறுகிறார்.

,, அய்யங்கண்ணுத் தேவர்
சேர்ந்தபூமங்கலம்

,, கைலாசத் தேவர்
சேர்ந்தபூமங்கலம்

,, சர்தார் தேவ இரக்கம்
உடன்குடி, குலசேகரபட்டணம் கொலைவழக்கு 10 வருடம் தண்டனை, மத்திய சர்க்கார் பென்ஷன் பெறுகிறார்.

திரு A. T. காசி
(பாதுகாப்பு கைதி) உடன்குடி, மத்திய ச
கார் பென்ஷன் பெறுகிறார்

,, சண்முகக்கோனர்
S/o. சங்கரக்கோனர், தெற்குப் புதுக்
திருச்செந்தூர். 1942-ல் ரயிலை நிறுத்திய
காக 6 மாத தண்டனை, அலிப்புரம் ஜெயி

,, கல்யாணசுந்தரம் என்ற கணபதி
பிள்
ஆத்தூர், 1932 போராட்டம் திருச்சி
யில் 10 மாதம்.

,, பெ. சரவணப்பெருமாள்
சிறுநாடார் குடியிருப்பு, 1940-ல் தனி
போராட்டம், திருச்செந்தூர், கோவில்
திண்டுக்கல், பழனி, அலிப்புரம் ஜெயில்க
7 மாதம், 15 நாள், மாநில பென்ஷன் பெ
கிறார். மனைவி பாலம்மாள், ஒரு ஆ
ஒரு பெண்ணும் இருக்கிறார்கள்.



திரு. நாராயண நாடார்,
S/o. சுடலைமுத்து நாடார்,
நாதன்கிணறு.

1942 போராட்டம்
SMC
~~எச். எம். வி~~ கேஸ் நெ. 2/42ல் ரூ. 100 அபராதம் 30 ம
சிறைத் தண்டனை அலிப்புரம் சிறை, மத்திய மாநில பென்ஷ
பெறுகிறார். மனைவி அன்னப்பழம் அம்மாள், மகன்
சிதம்பர பாண்டியன், ஆறுமுக பாண்டியன், இருவருக்கும்
கசையடி தண்டனை 7 மாதம், 4 நாள் சிறைவாசம். திரு. நாராய
நாடார் குடும்பமே கைதானது.

வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்கள்

சர்வ திரு. M B ராணா, மத்திய அமைச்சர்
(கப்பல் & போக்குவரத்து)

,, டி. எஸ். சந்தானம், டி. வி. எஸ்.

,, கோதாண்ட ராம கவுண்டர்
ஜில்லா காங்கிரஸ் தலைவர், ஈரோடு

,, கோபாலசாமி தென்கொண்டார்
மன்னார்குடி.

,, பெப்பின் பர்னாண்டோ
சுதந்திரா கட்சி, திருநெல்வேலி

,, ஆனந்தா கார்பொரேஷன், சென்னை

,, [illegible]. சென்னை

,, [illegible] தாழ்த்தப்பட்டோர் [illegible]
சேர்மாதேவி

,, ராஜாசிங் [illegible]

,, சங்கரன். கந்தசாமி கொழும்பு

,, P. S. ராஜகோபாலன், சென்னை,

,, சுந்தரம் பிள்ளை, ஸ்ரீ ராம் பாப்புலர்
பாளையங்கோட்டை

தியாகிகளுக்கு வணக்கம்

R. S. ராஜபாண்டியன்
20, 2-வது கிராஸ் தெரு,
மேல சி. ஐ. டி. நகர், சென்னை-35

பிலிப்ஸ் ரேடியோ ஹவுஸ்
மத்திய பஸ்நிலையக் கட்டிடம்
திருநெல்வேலி சந்திப்பு, போன்: 131

R. S. தங்கவேல்
111, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம்
சென்னை-24

சுதந்திர போராட்ட வீரர்களுக்கு எனது வணக்கம், நன்றி.

★

வி. வி. பெருமாள்
பரமன்குறிச்சி.

அடுத்து நிறைவேற்ற இருக்கும் திட்டங்கள்

ஸ்தூபியில் விடுபட்ட தியாகிகளின் பெயரை தனிக் கல்லில் பொறிப்பது.

தியாகிகளுடைய படங்களை பெரிது படுத்தி குறிப்புகளுடன் நமது தேசிய வாசக சாலையில் வைப்பது.

ஸ்தூபியைச் சேர்ந்த இடத்தில் விரைவில் ஒரு பிரார்த்தனை மண்டபமும் பூங்காவும் அமைப்பது.

தியாகிகளிடம் தங்களின் வாழ்க்கைக் குறிப்புக்களையும், தண்டனை விபரங்களையும் பாரத்தில் பூர்த்திசெய்து அனுப்பும்படி பல முறைக் கேட்டும் சிலர் அனுப்பவே இல்லை.

காலஞ்சென்றவர்களைப் பற்றிய குறிப்புக்களை விசாரித்துப் பிரசுரித்திருக்கிறோம். விபரங்கள் பிந்தி கிடைத்தவற்றை மீண்டும் சேர்த்துப் பிரசுரித்திருக்கிறோம்.

நன்றி தெரிவிக்கிறோம்

நினைவு ஸ்தூபி கட்டவும்.
நினைவு மலருக்கு விளம்ப
ரங்கள் தந்துதவிய நன்
கொடையாளர்களுக்கும்,
பூரண ஒத்துழைப்புதந்த
பேரூராட்சி மன்றத்தின
ருக்கும் இடம் நன்கொடை
தந்த திரு. கந்தசாமி
செட்டியார் குடும்பத்தின
ருக்கும் எங்கள் மனமார்ந்த
நன்றியைத் தெரிவித்துக்
கொள்ளுகிறோம்.

திருச்செந்தூர் தாலுகா சுதந்திர
போராட்ட வீரர்கள் சங்க
ஆறுமுகநே

தியாகிகள் பென்ஷன்: உயர்நீதிமன்றம் ஆணை

18-12-1993 1993

சென்னை, டிச. 17— உண்மையான தியாகிகளுக்கு, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான பென்ஷனை 3 மாதங்களுக்குள் அளிக்க வேண்டும் என்று, மத்திய அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

ஆர்.தங்கவேலு என்ற தியாகியும் வேறு சில தியாகிகளும் தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரித்த நீதிபதிகள் ஏ.ஆர்.லட்சுமணன், டி.ராஜு ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் அளித்த தீர்ப்பில் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

சுதந்திரப் போராட்ட வீரர் பென்ஷன் கோரி, தங்கவேலு உள்பட சிலர் அனுப்பிய மனுக்களை மத்திய அரசு நிராகரித்துவிட்டது. தாமதமாக மனு செய்ததாக மத்திய அரசு கூறியது. இதை எதிர்த்து அவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

"நாட்டின் சுதந்திரத்துக்காக போராடிய தியாகிகள் வயதான காலத்தில் கஷ்டப்படக்கூடாது என்ற நோக்கத்தில் இந்த பென்ஷனை மத்திய அரசு வழங்குகிறது. அத்தகையவர்களுக்கு தாராள மனதுடன் பென்ஷன் தரப்பட வேண்டும். தாமதமாக மனு செய்ததற்காக அவர்களது கோரிக்கையை நிராகரிக்கக்கூடாது" என்று, இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

"தன்னுடன் சிறையில் இருந்தவர் அளித்த கடிதம் மட்டும் இருந்தால் போதுமானது. அந்தச் சிறைச்சாலையின் ஆவணங்கள், நீதிமன்ற ஆவணங்கள் ஆகியவற்றை அவர்கள் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. அவர்களது கோரிக்கையை நிராகரிப்பதற்கு முன்னதாக வேறு ஆதாரம் இருந்தால் தருமாறு அவர்களுக்கு வாய்ப்பு தரலாம்.

மாநில மற்றும் மத்திய அரசின் தியாகி பென்ஷன் பெறுபவர் யாராக இருந்தாலும், அவர்களுக்கு விசாரணை எதுவின்றி சுதந்திரப் போராட்ட வீரர் பென்ஷனை தரலாம்" என்றும், நீதிபதிகள் கூறியுள்ளனர்.

தினமணி. 13-4-1993 1993 ★

தியாகிகளுக்கு இலவச பஸ் பாஸ்: கோர்ட் ஆணை

சென்னை, ஏப்.12— மத்திய மற்றும் மாநில அரசுகளின் பென்ஷனைப் பெறும் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் அனைவருக்கும் இலவச பஸ்பாஸ் வழங்க வேண்டும் என்று தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.ஆர்.தளவாய் தாக்கல் [illegible] ரித்த நீதிபதி டி.ராஜு இந்த உத்தரவை அளித்தார்.

மத்திய அரசின் பென்ஷனைப் பெறும் சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மாநில அரசின் நிதியிலிருந்து 250 ரூபாய் வழங்குமாறு தமிழக அரசு 9.8.92 அன்று உத்தரவிட்டது. இந்த உத்தரவை 4 மாவட்டங்களில் அமல்படுத்தவில்லை. இதே போல் மருத்துவப்படியும் பலருக்கு தரப்படுவதில்லை. இலவச பஸ்பாஸ் [illegible] என்று ஆர்.ஆர்.தளவாய் தனது மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி மத்திய அரசின் பென்ஷனை வாங்கி வருபவர்களுக்கு மாநில அரசின் நிதியிலிருந்து 250 ரூபாயை 1.8.92 முதல் பென்ஷனாக தர வேண்டும் என்றும் 1990 ஆகஸ்ட் முதல் மருத்துவ படியைப் பெறாதவர்களுக்கு மருத்துவப்படியைத் தரவேண்டும் என்றும் [illegible]